ஞான தீபம்

பருவம் 16 இதழ் 10,11

15 NOV 1983

JL
211, N 0295
N33 16.10,11.
910473

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

23 NOV 1933
MADRAS

இது

முப்பத்தோராண்டுகளாக நடைபெறுந்

தனிச் செந்தமிழ் வெளியீடு

A BI-MONTHLY

பதுமம், கசு. | ஆங்கிரஸ ௵ கார்த்திகை, மார்கழி [இதழ், க0, கக

பொருளடக்கம்

தொலைவினுணர்தல் (Telepathy)

சிறுவர்க்கான செந்தமிழ் (Essays For The Young)

ஆசிரியர் :

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

SWAMI VEDACHALAM,

பொதுநிலைக்கழக குரு,

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்திற்

T. M. PRESS

பதிப்பிடப்பட்டது.

15th November, 1933

ஒருபதுமக் கையொப்பம் | | நான்கு ரூபா

All Rights Reserved.

English Second-hand Books for Sale.

The under-noted second-hand English books are on sale in the T. M. Press Book-Depot at Pallavaram.
Though second-hand the books are quite fresh.

The Names of Books.	Original Price. Rs.	A.	P.	Reduced Price. Rs.	A.
Herbert Spencer's The Data of Ethics	3	12	0	2	4
Prof. L.T. Hobbouse's Development & Purpose	12	0	0	8	0
H.G. Well's Short History of the world	1	0	0	0	10
Ruskin's Modern Painters, Vol. II superior edition	8	0	0	4	0
,, Stones of Venice, 3 Vols.	3	0	0	2	0
J.S. Mill's Liberty, small type	0	12	0	0	8
,, Representative Govt.	2	0	0	1	4
Stopford Brooke's Lectures on Naturalism	1	0	0	0	14
C. Lamb's Essays of Elia	1	0	0	0	10
Lessing's Laocoon	1	0	0	0	12
Descartes' Discourse	1	0	0	0	10
Cardinal Newman's Idea of University	1	0	0	0	10
,, Certain Defficulties felt by Anglicans Vol. 2.	4	8	0	3	0
,, Lectures on the Present position of catholics	3	12	0	2	0
E. Spenser's Poems	0	8	0	0	4
Cowper's Poems		do			do
Swift's Battle of the Books		do			do
Wordsworth's Poems		do			do
Byron's Childe Harold		do			do
Macaulay's Lays of Rome		do			do
Bacon's Advancement of Learning		do			do
Milton's Areopagitica		do			do
Burke's Thoughts on Present Discontents		do			do
,, The Sublime & Beautiful		do			do
Swinburne's Poems	3	8	0	2	4
,, Atalanta, a drama	3	0	0	2	0

ENGLISH BOOKS ON SCIENTIFIC ASTROLOGY.

By a careful study of the under-noted astrological works you can easily learn your future. A knowledge of these will greatly aid to shape your future life and make it happy.

Astrology for All, by Alan Leo (a standard & exhaustive work),	12	0	0	9	0	0
An Introduction to Astrology, by W. Lilly, (another great work of rare merit)	6	0	0	4	0	

சுட்டிக்கூறிப், பின்னும், "என் மனைவி இப்போது அங்கேதான் இருக்கின்றனள்; எனக்கொரு மகனும் உண்டு. இவைகளை நீங்கள் தெரிந்துகொள்ளல் வேண்டும்; எனக்கு இங்கேயுள்ள சொத்தை விற்று அதற்கு வரும் பணத்தை என் மனைவிக்குச் சேர்ப்பித்தல் வேண்டும். யான் மணஞ்செய்து கொண்டதை எவரும் அறியாராதலால், இவ் வேற்பாடு செய்யப்படும் வரையில் யான் அமைதியுறுதல் இயலாது." என மொழிந்து மறைந்து போயினார். ஆவி வடிவில் வந்து அங்ஙனம் உரைத்த தம் நண்பர் உரைகளை அவ்விருவருந் தனித் தனியே குறித்துக்கொண்டார்கள். குறித்த அக் குறிப்புகளை ஒத்து நோக்க அவை யிரண்டும் முழுமையும் ஒத்திருந்தன. அதன் பின் அவ் விருவரும் இங்கிலாந்து சென்று அங்கே ஆராய்ந்தவழி, ஆவிவடிவிற் போந்து மொழிந்த தம் நண்பருரைகள் அத்தனையும் உண்மையாகவே யிருந்தன. அவர் நுவன்ற வண்ணமே குறிப்பிட்ட நாளிற் குறிப்பிட்ட இடத்தில் அவர்க்கு மணம் நடந்தது மெய்தான். அவர் விரும்பியவாறே அவர்க்கிருந்த உரிமைகளை விற்றுப் பெற்ற பணத்தை அவர் தம் மனைவியார்க்குச் சேர்ப்பித்து விட்டனர். இறந்து ஆவி வடிவில் நின்ற அவர் அங்ஙனம் வந்து தம் நண்பர் இருவர்க்கும் அச் செய்திகளை அறிவியாது போனால், அவையிற்றை எவருமே அறிதற்கு வழியில்லையாய்ப் போம் என்பது.

இனி, இறந்துபோகும் நிலைமையி லிருந்த ஒருவர், தாம் இறந்து போகும் நாள் அண்மையில் வரத், தமக்கு அறிமுகமான மாதர் ஒருவரின் கண்ணுக்குப் புலனாக நனவிலேயே தாம் தோன்றிய வரலாற்றினை இங் கெடுத்துக் காட்டுதும்:—

செல்வத்திற் சிறந்த ஒரு பெருமாட்டியும் அவர் தம் தங்கையுந் தாலதா என்னும் ஊரில் இருந்த ஞான்று, (1889-ஆம் ஆண்டு), அவர்கட்கும் ஒரு துரைமகனார்க்கும் பழக்கம் உண்டாயிற்று. அப்போது அத் துரைமகன் எலும்புருக்கி நோய் உடையராய், அது முதிர்ந்து போன நிலைமையில் இருந்தனர். அம் மாதர்களும் அவரும் ஒருநாட் பேசிக்கொண் டிருக்கையில், அவ் விருவரில் தமக்கையார்க்கு முன் தாம் காலமாவதா யிருந்தால், தாம் அங்ஙனங் காலமாவதை அவர்க்கு முன்னறிவிக்க முயல்வதாக அத் துரைமகன் மொழிந்தனர். இவ் வுடன்பாட்டு

நடந்த பின் இடை யிடையே அப் பெருமாட்டிமாரும் அத் துரை மகனும் எதிர்ப்பட்டுப் பலகாற் பேசிய துண்டு. அத் துரைமகன் கடுக்காயைப் போற் பழுப்பு நிறமான சட்டை யணிந்தவராகவே பலகாலும் உலாவிச் செல்வதை அம் மாதரார் கண்டு நகையாடுவது முண்டு. இங்ஙனம் அவர்கட்குட் பழக்கம் உண்டாகி மூன்று திங்கள் கழிந்த பின், அப் பெருமாட்டிமார் இருவரும் தாலதா எனனும் அவ் வூரைவிட்டுப் புறப்பட்டு, அதற்குத் தொலைவில் உளதாகிய தமதூர்க்கு வந்து சேர்ந்தனர். அங்ஙனம் வந்து சேர்ந்த சில திங்களுக்குப் பிறகு அவர்கள் அத் துரை மகனையும் அவர் தம் மனைவியையும் அறவே மறந்து போயினர். ஏனென்றால், அவர்கள் அவரை ஓர் அறிமுகமாகக் கருதினரே யல்லாமல், நெருங்கிய நண்பராகக் கருதிற்றிலர். அவ்வாறிருக்க 1890-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாள் அம் மாதரார் இருவரும் ஒரு நாடக சாலைக்குப் போய்த் திரும்பி இரவு பன்னிரண்டரை மணிக்குத் தம் இல்லத்திற்கு வரும் வழியில், தம் நண்பர் ஒருவரைப் புகைவண்டி நிலையத்தில் விடும் பொருட்டுத், தமது சாரட்டு வண்டியை அவ்விடத்திற்குச் செலுத்தினர். செலுத்தி அந் நண்பரை வழி யனுப்பிவிட்டுத் திரும்பத் தமது வண்டியிலேற வந்த மூத்த பெருமாட்டி பின் வருமாறு வரைகின்றார் :—

“புகைவண்டி நிலையத்தி லிருந்து யாங்கள் திரும்பி வருகையில், எங்கள் வேலைக்காரன் எங்கள் வண்டியைப் பார்த்துக் கொணர முன்னதாகச் சென்றான். ஆகவே, யாங்கள் படியண்டை வந்ததும், வண்டி எங்களுக்காக வந்து காத்துக்கொண்டிருத்தலைக் கண்டோம். என் தங்கை முற்பட்டு ஏறி வண்டியினுள்ளே அமர்ந்தனள். யான் மெதுவாகப் படி வழியே இறங்கி வந்தமையால் அவள் எனக்காகக் காக்க வேண்டியவ ளாயினள்; வேலைக்காரனும் வண்டிக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தனன். யான் அவ் வண்டிப் படிமேல் ஒரு காலைத் தூக்கி வைத்ததுந் திடுமெனத் திகைப்புற்று, வண்டியினுள்ளே நுழையாமல் தடைப்பட்டு நின்றேன். வண்டியினுள்ளே இருளா யிருந்தது. என்றாலும், அப்போது யான் நோக்கிய அவ்விடத்திற் காண்பட்ட ஒரு புதுமையான வெள்ளிய ஒளி மங்கலா யிருப்

பினுங் குறிப்பிட்ட இடத்தில் அது மிகவுந் தெளிவாய் ஒளிர, அதனிடையே ஒரு முகத்தின் வடிவம் என் தங்கையின் முகமாய் அவளை நோக்கியபடியாய் மெல்லிதாய்த் துலங்கித் தோன்றுதலைக் கண்டேன். இத் தோற்றம் நின்ற நேரம் ஒரு நொடிப் பொழுது தான் இருக்கும்; ஆயினும், எனக்கு அறிமுகமாகக் காணப்பட்ட அதன் ஒவ்வோர் அமைப்பும் யான் செவ்வையாகவே கண்டறியத்தக்கதா யிருந்தது. அம் முகத்தின் கூர்த்த சாயலும், ஒரு பக்கத்திற் சிறிது வகிர்ந்த குஞ்சியும், எடுப்பான மூக்குந், திருத்தமான மோவாயும், அதன்கட் கலகலப்பாய் முளைத்துள்ள சிறு பழுப்பு நிறமான தாடியும் நன்கு விளங்கித் தோன்றின. மற்றைக் காலங்களில் அத்துணைத் தெளிவாய் விளங்கக் காட்டுதற்குப் போதாத அம் மங்கல் ஒளியிற் றோன்றிய அப் புது வடிவத்தின் நிறங்களை அந்நேரத்தில் யான் நன்றாய்ப் பகுத்தறிய வல்லளானது தான், இப்போது யான் அதனைப் பற்றி நினைக்கையில் ஒரு புதுமையாக என் னுளத்திற் படுகின்றது. அவ் வடிவின் தலைமேல் தொப்பி யில்லை; ஆனாலுந், தெற்கே யுள்ளார் அணியும் உச்சிச் சட்டையினை யொப்பதொன்றே அதன்மேல் இருந்தது; அதன் நிறங் கடுக்காய் நிறத்தைச் சிறிது ஒத்திருந்தது. அவ் வடிவம் முழுதும் மிக்கதோர் இளைப்பு வாய்ந்து மெலிந்திருந்தது. எங்கள் வேலைக்காரன், யான் வண்டிக்குள் நுழையாமற் கற்சிலை போற் படிமேல் நிற்றலைக் கண்டு, இறும்பூதுற்றவனாய் எனது பாவாடையின் கீழ் விளிம்பு என் அடிக்கீழ் அகப்பட்டது போலு மெனக்கருதி, என்னைக் கைகொடுத் தெடுத்து அவ் வண்டியினுள்ளே அமரவைத்தான். யான் என் தங்கையின் பக்கத்தே அமர்ந்ததும், ‘இஃது உண்மையிலே நமது வண்டிதானா?’ என அவளைக் கேட்டேன்; ஏனென்றால், ஒரு புதிய ஆடவன் என் தங்கையின் எதிரே உட்கார்ந்திருத்தல் கண்டு என் உள்ளம் அவ்வளவு கலங்கி யுணர்வழிந்தது. மெய்யாகவே ஓர் ஆண்மகன் அங்கே உட்கார்ந்திருந்தனனாயின், என் தங்கையாவது வேலையாளாவது அங்ஙனம் அவர்க்கெதிரே வாய்பேசா திருத்தல் இயலாதே யென்பது அந் நேரத்தில் என் மனத்திற்குத் தென்படவில்லை. யான் உட்கார்ந்த பிறகு அங்கே ஏதொன்றுங் கண்டிலேன். ஆகவே, என் தங்கையை நோக்கி ‘உனக்கெதிரில் நீ

ஏதொன்றுங் காணவில்லையா?' என்று வினவினேன். அதற்கவள், 'ஏதொன்றுமில்லை; நல்லது, நீ வண்டியில் ஏறுகையில் இது நமது வண்டிதானா? எனக் கேட்கும்படி செய்தது எது?' வெனக் கேட்டு நகைபாடினாள். அதன்மேல் யான் கண்ட அத் தோற்றத்தை மேலே மொழிந்தபடி அவட்கு விரிவாய் எடுத்துரைத்தேன். 'ஓ, அவ் அறிமுகமான முகமும், ஒரு பக்கத்தில் வகிர்ந்த குஞ்சியுங், கடுக்காய் நிறச் சட்டையும் நாம் எங்ஙனே பார்த்தோம்? நீ குறிப்பித்தபடி யுள்ளது இங் கொன்றும் இல்லையே' என அவள் கூறினள். யாங்கள் எவ்வளவோ அதைப்பற்றி நினைவு கூர்தற்கு முயன்று பார்த்தோம், ஏதொன்றுங் கிடைக்கவில்லை. பின்னர் நாங்கள் வீடு போய்ச் சேர்ந்தவுடன் எங்கள் அன்னையார்பால் அத் தோற்றத்தைப் பற்றிச் சொன்னோம். யான் சொன்ன குறிப்புகளி லிருந்து எங்கள் அன்னையார் அத்தகையதொரு முகத்தை ஏதோ ஒரு வகையாய்ச் சிறிது நினைவு கூர்ந்தார். மறுநாள் மாலையில், எங்களுக்குப் பழக்கமான ஓரிளைஞர் எங்களைக் காண வந்தார். அவருக்கும் அந் நிகழ்ச்சியை அறிவித்தோம். அதைப்பற்றி யாங்கள் எல்லேமும் நெடுகப் பேசியும் ஏதும் உண்மை தெரிந்துகொள்ளல் கூடவில்லை. யான் கண்ட அம்முகத்தைப் போல்வ தொரு முகம் எனக்குப் பழக்கமான முகங்கள் பலவற்றுள் ஒன்றுதான் என்பதை யான் நன்கு நினைவு கூர்ந்தேனாயினும், 'எப்போது எங்கே எனவும், யான் கண்ட அத் தோற்றத்திற் குரிய ஆண்மகனின் உண்மையான பெயர் எது வெனவும் யான் நினைத்தறியக் கூடவில்லை. இங்ஙனமே அடுத்தடுத்து மறந்துவிடும் எனது நினைவைக் கொண்டு அதனைத் தெரிந்துகொள்ளக் கூடாதவ ளானேன். பின்னர்ச் சில நாட் சென்று, நாங்கள், எம்மை முன்னே காணவந்த இளைஞரின் பாட்டியாரைப் பார்க்கப் போனோம். எம்மைக் கண்டதும் அந்த அம்மையார், 'தாதைா ஊரிலிருந்து எவ்வளவு துயரமான செய்தி எனக்கு வந்ததென்பதை நீங்கள் அறிவீர்களா? ——என்னும் பெயர் பூண்ட அத் துரைமகனார் இறந்துபோனார். ஆனால், அதன் வரலாறு முழுமையும் எனக்கு எட்டவில்லை.' என்றனர். அச் செய்தி கேட்டதும் யானும் என் தங்கையும் ஒருவரை யொருவர் பார்த்தோம். அத் துரைமகன் பெயர் கேட்ட பின்னர்; அக்

23 NOV 193
MADRA

கூர்த்தமுகச் சாயலுங் கடுக்காய் நிறச் சட்டையும் உடையவர் இன்னா ரென்பது புலனாயிற்று. யான் அத் தோற்றத்தின் கூறுபாடுகளை விரித்துச் சொன்னது நல்லதாயிற்று; ஏனென்றால், என்னைப்போலவே என் தங்கையும் அப் பெயர் சொல்லக் கேட்டவளவில், யான் கூறியது இன்னா ரென்பதைத் தெரிந்துகொண்டாள். அவ் வம்மையாரின் பேரர் அப்போது வீட்டினுள்ளே வரக் கண்டு, அத் துரைமகன் இறந்துபட்ட நாளைப் புதினத் தாள்களி லிருந்து திட்டமாய்த் தெரிந் துரைக்கும்படி அவரை வேண்டிக் கேட்டேன். மார்ச்சுத் திங்கள் 14-ஆம் நாளே, அதாவது யான் கண்ட தோற்றத்திற்கு இரண்டு நாட் பிற் பட்டதே, அவர் இறந்துபட்ட நாளாதல் பெறப்பட்டது. இன்னும் அச் செய்தியைச் செவ்வையாய்த் தெரிதல் வேண்டித் தாலதாவிலுள்ள நண்பர்க்கு யான் எழுத, அத் துரைமகன் நவம்பர் 24-ஆம் நாளி லிருந்து படுக்கையிலேயே கிடந்தன ரென்றும், அப்போதிலிருந்து அவர் மிகவும் வலி குறைந்த நிலைமையி லிருந்தன ரென்றும், ஆனாலும் அவர் ஆழ்ந்த துயிலில் நீளக் கிடந்து வந்தமையால் அவர் காலமான கடைசி இரவு வரையில் அவர் பிழைத்துக்கொள்வ ரென்னும் நம்பிக்கையே யிருந்த தென்றும் விளக்கமான செய்தி எனக்குக் கிடைத்தது. அத் துரைமகன் என் தங்கைக்கு முன்னே தோன்றுவதாக உறுதிமொழி புகன்றிருந்தும், பிறகு அவர் என்னுடைய கண்களுக்கே தோன்றலானது எங்கட்கு மிக்கதோர் இறும்பூதினை விளைவித்தது. ஆனாலும், இப்போது மொழிந்த இத் தோற்றத்திற்கு முன்னரே பலகால் யான் பல வியத்தகு நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளேன் எனக் கூற வேண்டியவளா யிருக்கின்றேன். என்றாலும், இப்போது கண்ட உருவத்திலேதான் யான் ஒவ்வோர் உறுப்பினையும், முகத்தின் சாயலையும், உடையின் நிறத்தையுந் தெளிவுறக் கண்டேன்.'' என்பது.

இவ்வாறு அம் மாதரார் கண்ட உருவெளித் தோற்றமானது, அதற்குக் காரணரான துரைமகனார் இறந்துபடுதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே தோன்றி, அவரது சாக்காட்டினை அவர்க்கு முன்னறிவித்தமை நினைவிற் பதிக்கற்பாற்று. தாம் இறந்து போதற்கு முற்பட்டே அவர் அவர்க்குத் தோன்றுவ

தாகக் கூறிய உறுதிமொழி அவரது நினைவின்கண் உருத்து நின்றமையால், அது பிழைபடாமல் அவரது உருவினை அவரது கண்முன்னே தோற்றுவிப்ப தாயிற்று. அத் துரைமகனார் தாங் கூறிய சொற்படியே அவ் வம்மையாரின் தங்கைக் கெதிரே தோன்றியுந், தங்கையார் தெளிவுக் காட்சி (Clairvoyant vision) உடையரல்லாமையால் அவர்க் கது புலனாகாது நின்று, தெளிவுக் காட்சியுடையரான அவர்தந் தமக்கையார்க்கே புலனாவதாயிற் றென்க.

இன்னுங் கல்லூரியிற் கலைபயின்றுகொண் டிருந்த மாணவர் ஒருவர்க்குத், தொலைவி லிருந்த அவர்தந் தந்தையார் தாம் சாகும் முன் தமது நிலையினை முன்னறிவித்த வரலாறு மிகவும் வியக்கற்பால தொன்றா யிருத்தலின், அதனையும் இங்கே யெடுத்துக் காட்டுதும் :—

ஒரு கல்லூரி மாணவர் ஓர் இரவு சிறிது முன்னதாகப் படுக்கைக்குச் சென்றார்; சென்றவர் தாம் இருந்து கல்விப் பயிற்சி செய்யும் அறையின் வெளிக் கதவைப் பூட்டிக்கொண்டு, அதற்குந் தமது படுக்கை யறைக்கும் நடுவிலுள்ள கதவைமட்டுந் திறப்பாக விட்டு வைத்தார். அவர் கலை பயிலும் அறையின் நடுவே யிருந்த பெரிய கணப்புச் சட்டியின் தீ கொழுந்துவிட்டு எரிந்தமையால், அவ் வறையினுள் ளிருந்த எல்லாப் பொருள்களும் பட்டப்பகல் வெளிச்சத்திற் றோன்றுதல் போல் நன்கு விளங்கித் தோன்றின. அப்போது இரவு பத்தரை மணி; அம் மாணவரும் ஏதுந் தடையின்றி நெடுந்துயில் கொள்ளும் விருப்பத்துடன் படுக்கைமேற் சென்று படுத்தார்; அந் நேரத்தில் இரண்டறைகளின் நடுவேயுள்ள நிலையண்டை நிறைந்த அத் தீ வெளிச்சத்து மினுமினுப்பின்கண் தம் தந்தையாரின் உருவம் நிற்றலை அவர் கண்டார். கண்டதும் உண்டான இறும்பூதினால் அவர் சிறிது நேரம் வரையில் அசைவின்றிக் கிடந்தார்; துயரமும் ஆவலுங் கொண்ட அவ் வுருவத்து முகத்தின்மேல் அக் கணப்புத் தீ வெளிச்சம் படுதலை அவர் சிறிது நேரம் உற்றுப் பார்க்கையில், அவ் வுருவந் தன் கையை உயர எடுத்து, அவரைத் தன்பால் வருமாறு குறிசெய்து அழைத்தது. அதனைக் காண்டலும், அவரைத் தன்வயப்படுத்தி யிருந்த திகைப்புந் திகிலும் அகன்றன; உடனே அம் மாணவர் படுக்கையினின்றுங் கீழே குதித்து, அந்

நிலைக் கதவண்டை பாய்ந்தார்; ஆயினும், அவர் அங்கு நெருங்கும் முன்னரே அவ் வுருவம் மறைந்து போயிற்று.

அதனால் அவர் திடுக்கிட்டவராய்த், தாம் இருக்கும் அறையினையும் படுக்கும் அறையினையும் அக்கக்காய்த் தேடிப் பார்த்தார்; தம்மைத் தவிர வேறெவரும் அங்கில்லை யென்பது அவருள்ளத்திற்குத் தேற்றமாயிற்று; ஏனென்றாற், புறத்தியான் ஒருவன் அங்கே புகுந்து ஒளிந்திருப்பதற்கு இடமே யில்லை. வெளிக் கதவோ அவர் தாம் முன் விட்டபடியே செவ்வையாகப் பூட்டப்பட் டிருந்தது! அது வல்லாமலும், அங்குத் தோன்றிய உருவமோ தப்பாமல் தெளிவாக அவர்தந் தந்தையாரதே யாகும்; அவ் வுருவின் முகத்திற் புலனான ஓர் ஆவற் குறிப்பைத் தவிரச், சில கிழமைகளுக்கு முன் அம் மாணவர் தாம் கடைசியாகப் பார்த்து வந்தபடியே தான் அது தோன்றிற்று. தன்னுடன் பயிலும் மாணவர் எவரேனும் அங்ஙனங் கேலியாக வந்து ஏமாற்றினாரென்று கொள்வதற்கும் இடமில்லை. முடிவாக ஏதோ ஒரு பொய்யான தோற்றத்தில் தமது மனம் அகப்பட் டிருக்க வேண்டுமென அவர் எண்ணினார்; ஆனாலும், இயற்கையாய்த் தோன்றிய அவ் வுருவமும், அதன் முகத்தின்மேற் றுளங்கிய தீயின் ஒளியும் அவரது நினைவின்கட் பதிந்து தோன்றா நிற்கையில், அதனை அங்ஙனம் பொய்த்தோற்றமென முடிவு செய்வதும் அவர்க்கு இடர்ப்பாடாய் இருந்தது; ஆகவே, அம் மாணவர் தமது மனத்தை மறுபடியும் அமைதிப் படுத்திக்கொண்டு துயில் கொள்ளச் சென்றார்.

ஆனால், அவர் கொண்ட மன அதிர்ச்சியானது அவர்க்குத் தூக்கம் பிடியாவாறு செய்தது; ஒருமணி நேரத்திற்கு மேலாக அவர் சுவரின்மேல் ஆடிக்கொண் டிருந்த நிழல்களையே உற்று நோக்கிக்கொண் டிருக்க, அதன் பின் அவர் தமக்குத் தூக்கம் வருதலை யுணர்ந்தார். ஆனால், உள்ளபடியே அவர் தூக்கத்திற் சென்றனரோ, அல்லது தூங்கும் நிலைக்கு நெருங்கினரோ என்பது அவராற் சொல்லக் கூடவில்லை. எனினும், மறுபடியும் அவ் வுருவம் அந் நிலைக் கதவண்டை தோன்றவே, அவர் திடுக்கிட்டு முற்றிலும் விழித்துக்கொண்டார்; அவ் வுருவின் முகம் முன்போலவே ஆவல் நிரம்பிய குறிப்புடைய தாகவும், அது முன்னை

யை விட அவர் தம்மை மிக்க விருப்பத்துடன் கைகாட்டி யழைப்பதாகவுங் காணப்பட்டது. இம்முறை அது தம்மைத் தப்பிப் போய்விட விடுதல் ஆகாது என்னுந் தீர்மானம் உடையராய், அம் மாணவர் தமது படுக்கையி லிருந்து ஒரே குதியாய்க் குதித்து, அக் கதவண்டை சென்று அவ் ஆவி யுருவினை வலுவாய்ப் பிடித்தார். ஆனால், மறுபடியும் அவர் ஏமாற்றமே யடைந்தார். அதற்கு இரண்டு முழந் தொலைவில் அவர் சென்றபோதும், முதற் றோன்றிய உருவினையே யொத்திருந்த அஃது அவரது கையிற் பிடிபடாமற் போகவே, அவர் வெறு வெளியையே பிடித்து ஏமாந்தவ ரானார். திரும்பவும் அவ்வறைகளி னிடமெல்லாம் அவரால் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. அது மெய்யாகவே மக்கள் யாக்கையிற் றோன்றிய தொன்றாயிற், பூட்டப்பட்டிருக்கும் அவ் வறைகளை விட்டு அது வெளியே செல்லுதலாவது அல்ல தவற் றுள்ளே ஒளிந்திருத்தலாவது இயலாது.

இளைஞர் பலரைப் போலவே, இம் மாணவரும் ஆவி வடிவங்களில் ஏறக்குறைய நம்பிக்கையற்றவரா யிருந்தனர்; ஆகவே, தாங் கண்ட தோற்றத்தால் மிகவுந் துணுக்குற்றனரேனும், தமதுடம்பின்கட் புலப்படாதுள்ள ஒரு நோய் காரணமாய் உண்டான ஒரு மனக் கற்பனையே அத் தோற்றத்திற்கு ஏதுவாகுமென்று தமக்குள் ஒரு முடிவு செய்துகொண்டார். அதன் பின் அவர் தமது நெற்றியைக் குளிர்ந்த தண்ணீர் கொண்டு கழுவிக் குளிரவைத்து, ஏதோ மூளையின் பிசகாற் காணப்பட்ட அப் பொய்த் தோற்றத்தைப் பற்றித் தாம் நினைத்த லாகாதென உறுதி செய்துகொண்டு திரும்பவுந் துயில்கொளச் சென்றார். அவர் அங்ஙனந் துயிலச் சென்றபோது அவரது கல்லூரிக் கடிகாரங்கள் நள்ளிராப் பொழுதை மணியடித்து அறிவித்தன. தாம் பெறுதற்கு மிக விழைந்த துயிலை யடைதற்கு அவர் எவ்வளவோ முயன்றனர்.

கடைசியாக அவர் தாம் வேண்டியபடியே துயிலிற் சென்றார்; ஆனால், தாம் உணர் விழந்து கிடந்த நேரம் மிகச் சிறிதாகத் தான் இருக்கவேண்டுமென்பது அவர்க்குப் பட்டது; ஏனென்றால், அவர் மறுபடியுந் திகில்கொண்ட நெஞ்சினராய்ச் சடுதியில் விழித் தெழுந்தார். அவர் கலை பயிலும் அறையிற் கணப்புச்

வழக்கிடலாயினர். முடிவாக அவ்விருவரில் ஒருவர், "ஓ! எனக்கு அது தெரியும். திங்களானது ஞாயிற்றினும் இருமடங்கு பயன் உடையது; ஏனென்றால், அது தனது விளக்கத்தை எல்லாரும் வேண்டும் இராக்காலத்தே ஒளிவீசுகின்றது; மற்று, ஞாயிறோ தன்னை எவரும் வேண்டாத பகற்காலத்தில் ஒளிர்கின்றதன்றோ!" என்றான்.

உதவிச்சம்பளங் கேட்டல்

தன் அரசனுக்காக உற்ற நேரத்திற் போர்புரிந்து வெற்றி பெற்ற அஞ்சா ஆண்மையனான படைஞன் ஒருவன், தனக்கு உதவிச்சம்பளம் அளிக்கும்படி கேட்கத் தன் அரசன்பாற் போந்தனன். போந்து அரசற்குத் தன் வேண்டுகோளைத் தெரிவிக்க, அரசன் "நல்லது பார்ப்போம்," என்றான். உடனே அம் மறவன், "அதற்காகத் தேவரீர் காக்கவேண்டுவதில்லை. இப்போதே தாங்கள் பார்க்கலாம்." என்றுசொல்லி, உடனே தன் உடம்பின்மேல் அணிந்திருந்த சட்டையைக் கழற்றிவிட்டுப், போர்த்தழும்புகள் நிறைந்த தன் மார்பினைக் காட்டினான். அதனை அரசன் கண்டதும் "இனிப் பார்க்கலாம்" என்று சொல்லமாட்டானாய், உடனே அவற்கு உதவிச்சம்பளங் கொடுக்குமாறு கட்டளையிட்டனன்.

ஒரு மீகாமனது கனவு

"கனவுகாண் காலத்தும் பிறர்க்குதவிசெய்வதே அறநிது, நல்லது" என்றார் மேனாட்டு நாடகநூலாசிரியர் ஒருவர் (Calderon). ஒருகால் ஒரு சிறந்த மீகாமன் தனது கப்பலில் தன் அறையினுள்ளே படுத்து உறங்கிக்கொண் டிருந்தான். அவனது மரக்கலம் அப்போது சென்றுகொண்டிருந்த "நடுநிலக்கடல்" அமைதியாகவேயிருந்தது; வானத்திலும் புயல் இல்லை. ஆனால், உறங்கிக்கொண்டிருந்த அக்கப்பற்றலைவனோ, தனது கப்பல் கடலுள் அமிழ்வதாகக் கனவுகண்டு, அக்கனவு நிலையிலேயே அறையைவிட்டு வெளியே நடந்துவந்து, சுக்கான் திருப்புவோன் வேலையைத் தான் கைக்கொண்டு, தன் கப்பலாட்களை யெல்லாம் விழிப்பாயிருக்கும்படி கூவினான்;

தூக்கத்திலிருந்தவாறே தம் தலைவன் செய்யுஞ் செயல்களைக் கண்டு இறும்பூதுற்ற அவ் ஆட்களெல்லாரும் நகையாடினர்; அவர்தம் நகையொலியைக் கேட்டு விழித்துக்கொண்ட அம் மீகாமன் மீண்டுந் தன் அறைக்குட்சென்று மனக்கலக்கத்துடனேயே தூங்கலாயினன். அங்ஙனந் தூங்கிய சிறிது நேரத்தின்பின் திரும்பவும் அவன் விழித்தெழுந்து பார்க்கப், புயற்காற்று அறிவிக்குங்கருவி, வரப்போகுஞ் சூறாவளியினை அறிவித்தது. உடனே அவன் மேற்றட்டின் மேலோடித் தன் ஆட்களைக் கூவி யழைத்தனன். சுக்கான் திருப்பிக்கொண்டிருந்த ஆடவன் "ஐய, மறுபடியுங் கனவோ?" என வினவினன். என்றாலும், அவன்றன் ஆட்கள் அவன் சொற்படியே சென்று அக்கப்பலின் பாய்களை உடனே சுருக்கிக் கட்டினர். சிறிது நேரத்திலெல்லாம் ஒரு பெருஞ் சூறைக்காற்று வந்து வீசியது. ஆயினும், பாய்கள் மடக்கிக்கட்டப்பெற்றமையால் இக்கப்பல் ஏதோர் இடருமின்றிச் சென்றது; முன்னதாகவே பாய் மடக்கிக் கட்டப்பெறாத மற்றைக் கப்பல்களோ அப் பெருங்காற்றினால் அலைக்கப்பட்டுக் கடலுள் அமிழ்ந்திப்போயின. கனவிலுந் தன் கடமையைச் செலுத்திய தம் தலைவனுக்கு அக்கப்பலாட்கள் எல்லாரும் நன்றிசெலுத்தினர்.

ஒரு கடல் மனிதன்

௧௭௨௫-ஆம் ஆண்டு ஒரு கப்பல் மேல்கடலில் நூற்றெண்பதடி ஆழமுள்ள ஒரு பகுதியில் ஓடிக்கொண்டிருக்கையிற், காலை பத்துமணிக்கு மக்கள் வடிவம் வாய்ந்த ஒருவன் அக்கடல் நீரினின்றும் மேலெழுந்து அக்கப்பலின் இடதுபக்கத்தே காணப்பட்டனன். அவனைக்கண்ட அக்கப்பற்றலைவன் உடனே அவனை மேலேதூக்கிக் கப்பலிற் சேர்த்தற்பொருட்டு ஒரு கொளுக்கியை யெடுத்தான். அதுகண்ட அக்கப்பல் மீகாமன், அத்தலைவனைத்தடுத்து "அவன் உண்மையான மனிதன் அல்லன்; அவன் கடல்நீரில் உயிர்வாழும் மனிதனாவன்; அவனை நீங்கள் மேலிழுக்க முயன்றால், அவன் உங்களைக் கீழ் இழுத்துவிடுவன்." என்றான். அதுகேட்ட தலைவன், அக்கடல்மனிதனின் வடிவம் முழுமையும் பார்க்கவேண்டி ஒரு

சிறுகோலை யெடுத்து அவனது முதுகின்மேல் எறிந்தான். எறிந்தகோல் தன்மேற் படவே அவன் சினங்கொண்டான்போல் தன் இருகைகளையும் மடித்துக்கொண்டு தன் முகத்தைக் காட்டினன். அதன்பிறகு அவன் அக்கப்பலைச் சுற்றிச் சென்று அதன் பின்னணியத்திலுள்ள சுக்கானைத் தன் இருகைகளாலும் இறுகப்பற்றிக்கொண்டான். அதுகண்ட அக்கப்பல் ஆட்கள், அவன் அச்சுக்கானைப் பழுதுபடுத்தி விடுவன் என அஞ்சி அதனை இறுக்கிவைக்கவேண்டியவர்களானார்கள். பின்னர் அக்கடல்மகன் அங்கிருந்து, மக்கள் நீந்துதல்போலவே நீந்திக்கொண்டு கப்பலின் முன்பக்கத்திற் போய், அதன் முன்னணியத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஓர் அழகிய பெண்ணுருவைச் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பால் அவன் அப்பெண்ணுருவைப் பற்றிக்கொள்ள விழைந்தான்போற் கடல்நீரினின்றும் மேற்கிளம்பினான். இவ்வளவும் அக்கப்பலில் இருந்தார் எல்லார் கண்ணுக்கும் எதிரே நிகழ்ந்தன.

திரும்பவும் அந்நீர்மகன் அக்கப்பலின் இடதுபக்கமாய்ப் போந்தனன். கப்பன்மேலிருந்தவர் ஒரு கயிற்றில் ஒரு கடன்மீனைக் கட்டி அதனை அவன் முன்னே தொங்க விட்டனர். அவன் அதனைப் பிடித்துப்பார்த்தனனேயன்றி வேறொன்றுஞ் செய்திலன். பின்னர் அவன் அதனைவிட்டு நீந்திப்போய் அம்மரக்கலத்தின் பின்னணியத்திற்கு வந்தனன்; வந்து மறுபடியுஞ் சுக்கானைப் பற்றிக்கொண்டனன். அதுகண்ட மீகாமன் ஓர் இருப்புவல்லயத்தை யெடுத்து அதனை அவன்மீதெறிந்து அவனைக் கொல்லுதற்கு முனைந்தான். ஆனால், அவ்வல்லயமோ அக்கப்பற் கயிறுகளினிடையே சிக்கிக்கொண்டமையால், அக்கடல்மகனது முதுகிற் பட்டதேயன்றி அஃது அவனை ஊறுபடுத்தவில்லை; தன் முதுகிற்பட்டதும் அவன் திரும்பி முன்போலவே தனது முகத்தைக் காட்டினன். அதன்பிறகு, அவன் மறித்தும் முன்னணியத்திற்குப் போந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த பெண்பாவையை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். அதன்மேல் மீகாமனின் துணைவன் அவன்மேலெறிதற்கு அவ்வல்லயத்தை யெடுத்துவருகவென்று

டவினான். ஆனால், முன்னொருகால் அதே கடல்வழியில் அதே மரக்கலத்தில் மேலேறிப்போந்து தன்னைத் தானாகவே பிடித்துக்கொண்டு கடலில் எறியப்பட்ட புதுமையான ஓர் உயிராய் அவன் இருக்கலாமோ என ஐயுற்று அஞ்சி, அத் துணைவன் அவ்வல்லையத்தால் அவனைக் கொல்லாமல், அதனால் மெல்ல அவனை முதுகிற் குத்தித்தள்ளினான். அங்ஙனங் குத்தவே, அக்கடல்மகன் முன்போலவே தன் முகத்தைச் சினந்து காட்டி, அக்கப்பலின் மேற்றட்டுவரையில் ஏறிவந்தான். வந்தவன், கப்பலாட்களில் இருவர் பிடித்திருந்த கயிறொன்றைத் தானுங் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். அவ்விருவரும் அக்கயிற்றை அவன் கையினின்றும் வலிந்து இழுக்கவே, அந் நீர்மகனும் அக்கயிற்றொடு கூடவே கப்பலின் மேற்றட்டிற்கு இழுக்கப்பட்டனன். ஆனால், மேற்றட்டிற்கு வந்தவுடனே அவன் உடனே கடலிற்குதித்துத் தொலைவில் நீந்திப்போயினன். மீண்டுஞ் சிறிது நேரத்தில் அக் கடல்மகன் நீந்திக் கொண்டு எங்கள் கப்பலண்டையில் வந்தான். இப்போது அவன் தண்ணீர்க்குமேற் கொப்பூழ்வரையில் உயர எழுந்தமையால், அம்மரக்கலத்திலிருந்தவர்கள் அவனது உடம்பின் மேற்பகுதியை நன்கு பார்க்கக்கூடியவர்களானார்கள். அவனது மார்பு சிறந்த ஒரு பெண்மகளின் மார்புபோற் பெரிதாய் அழகிதாய் இருந்தது. ஆனால், அவன் முதுகைத் திருப்பிய போது ஆண்மகனாகவே காணப்பட்டான். அதன் பின்னர் அவன் அக்கப்பலைச் சுற்றி நீந்தி மறைந்துபோய்விட்டான். அதற்குப்பிறகு அக்கப்பலிலுள்ளவர் அவனைப் பார்க்கவில்லை.

காலை பத்துமணியிலிருந்து பன்னிரண்டுமணி வரையில் அக்கடன்மகன் அம்மரக்கலத்தண்டையே வந்தனன். அம் மரக்கலத்திருந்தவர்கள் அவனைக்கண்டு அச்சமுறாதிருந்தால், அவனைக் கப்பலின் மேற்றட்டுமேற் பலகாலும் ஏற்றியிருக்கலாம். அவனதுடம்பின் நீளம் ஏறக்குறைய எட்டடி; தோலின் நிறம் பழுப்பு; அத்தோலின்மேற் செதிள் ஏதும் இல்லை; அவனுடைய நடையெல்லாம் மக்கள் நடைகளையே யொத்திருந்தன; கண்கள் இருக்கவேண்டிய அளவுப்படியே அமைந்திருந்தன; வாய் சிறிய அளவினது; மூக்கும் பெரிதாயுந் தட்

டையாயும் இருந்தது; பற்கள் மிகவும் வெண்மையாய்த் தோன்றின; மயிர் கறுப்பு; மோவாயிற் பாசிபடர்ந்தாற்போல் மயிர்கள் இருந்தன; மூக்கின்கீழ் ஒருவகையான மீசை; காதுகள் மக்களின் காதுகளைப்போலவே காணப்பட்டன; ஆனால், அவனுடைய கைவிரல் கால்விரல்களுக்கு இடையில்மட்டுந் தாராப்பறவைகளுக்குள்ளதுபோற் சவ்விருந்தது. சுருங்கச் சொல்லுங்கால் அவன் திருத்தமான அமைப்புவாய்ந்த ஓர் ஆண்மகனாகவே காணப்பட்டனன். இங்ஙனங் காணப்பட்ட அக்கடன்மகனைப்பற்றிய செய்தி முற்றும் உண்மையென்று அக்கப்பற்றலைவனும் மீகாமனும் அதில் வேலைசெய்த முப்பத்திரண்டு ஆட்களும் உறுதிமொழி புகன்றார்கள்.

உற்றுநோக்கி யாராய்தல்

உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் சிறியவாயிருப்பினும் பெரியவாய் இருப்பினும், அவை தம்மை உற்றுநோக்கி யாராய்ந்தவர்களே அறிவிற் பெரியராகிப், பல அரும்பெரும் புதுமைகளைக் கண்டறிந்து, நம்மனோர்க்கெல்லாம் அளப்பிலா நன்மைகளைச் செய்திருக்கின்றார்கள். எதனையும் உற்றுநோக்கி ஆராய்தலின்றி, ஆடு மாடுகளைப்போற் பொதுநோக்காய்ச் சென்றவர்கள் தாமும் அறிவு விளங்கப்பெற்றதில்லை, பிறர்க்கும் நன்மையாவன செய்ததில்லை. சோற்றுக்குக் கேடும் மண்ணுக்குப் பொறையுமாய் இருந்து அவர்கள் தம் வாழ்நாளை உண்டு உடுத்து உறங்கிக் கழித்தவர்களேயாவர். இலந்தை மரத்திலிருந்து நன்றாய்ப் பழுத்த பழங்கள் உதிர்ந்து கீழ் விழுதலை எத்தனைகோடி மக்கள் முற்காலத்தும் பிற்காலத்தும் பார்த்திருக்கின்றார்கள்! அவர்களுள் எத்தனைபேர் அவைகள் ஏன் அங்ஙனங் கீழ்விழுகின்றன என்று ஆராய்ந்து பார்த்தவர்கள்? **நியூட்டன்** என்னும் ஒருவரைத்தவிர ஏனைக் கோடி கோடியானமக்கள் எவரும் அதன் உண்மையை அறியவில்லையே! ஏன்? உற்றுநோக்கி யாராய்ந்துபார்க்கும் அறிவும் முயற்சியும் அவரைத்தவிர மற்றையோர்க்கு இல்லாதுபோனமையா லன்றோ? மற்று, நியூட்டன் என்னும் பேர் ஆசிரியரோ இவ்வுலகியற்பொருட்டன்மைகளை எந்நேரமும் உற்றுநோக்கிய

படியாகவும், உற்றுநோக்கி யாராய்ந்தபடியாகவுமே தமது அரிய வாழ்நாளை எந்நேரமும் பயன்படுத்திவந்தார். ஒருகால் அவர் ஓர் இலந்தைமரத்தி னடியில் அமர்ந்திருக்கையில், அதில் நன்றாய்ப் பழுத்திருந்த ஒருபழங் காம்புகழன்று அவரது காலண்டையிற் கீழ் விழுந்தது. அதனைக்கண்ட அவர், உடனே, அஃதேன் அங்ஙனங் கீழ்விழலாயிற்று என ஆராயப் புகுந்தார். அந்நிகழ்ச்சியினைப் புல்லியதென்று விலக்கிவிடாமல், அல்லும்பகலும் அவர் அதனைப் பலவாற்றான் ஆராய்ந்து பார்க்க, மேலுள்ள பருப்பொருள்களைக் கீழே தன் கண் இழுத்துக்கொள்ளும் ஓர் ஆற்றல் இந்நிலவுலகத்திற்கு உண்டென்னும் அரும்பேருண்மையினை அவர் கண்டுகொண்டார். இந்நிலவுலகமாகிய பருப்பொருளுக்கு உள்ள இவ் இழுக்கு மாற்றலை அவர் கண்டறிந்த பிறகுதான், வான்வெளியிற் பந்துகள்போற் சுழலாநின்ற ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிமுதலான ஏழு உலகங்களும், அவற்றோடொத்த அளவிடப்படாத எண்ணிறந்த வான்மீன் மண்டிலங்களுந் தத்தம் பருமனுக்குத்தக்க தொலைவில் நின்று ஒன்றையொன்று இழுத்தபடியாய் ஒன்றையொன்று சுற்றிச்செல்லும் வியப்பான உண்மை நிகழ்ச்சியினையும் இன்னும் இது போன்ற வேறு பல புதுமைகளையுங் கண்டு வெளியிட்டார்.

இப்பேராசிரியரது அறிவுவரலாற்றை யெண்ணிப்பார்க்குங்காற், பகுத்தறிவொடுகூடாத கட்பார்வை பயன் இலதாதலை உணர்கின்றனம் அல்லமோ? மக்களெல்லாருங் கண்ணினாற் பொருள்களையும் பொருள் நிகழ்ச்சிகளையும் பார்த்துண்டாகிய ஓரளவான பகுத்தறிவுகொண்டே வாழ்க்கைசெலுத்தி வருகின்றனரென்பது உண்மையே. என்றாலும், ஒருபொருட்டன்மை மற்றொன்றின் வேறாதலும், அன்றி ஒன்று மற்றொன்றை ஒத்திருத்தலும், அவ்வாறெல்லாம் அமைந்த அமைப்புகளின்கீழ் அவைதம்மை யமைத்த முதற்பேரறிவு ஒன்றுமிளிரும்பான்மையும் எல்லாங் கருத்து ஒருங்கி ஆராய்ந்து பார்ப்பவர் அம்மக்களுள் எத்தனைபேர் உளர்? ஒரோவொரு காலங்களில் ஒரோவொருவரே மிக அரியராய் ஆங்காங்குக் காணப்படுகின்றனர். ஒரு கயிற்றிற்கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் ஓர் எடைகல் அங்கும் இங்குமாய் ஊசலாடுவதை எத்தனை யாயிரக் கணக்கான மக்கள் முன்னும் பின்னும் பார்த்திருக்கவேண்டும்! அதிலிருந்து நாழிகையறிவிக்குங் கடிகாரக் கருவியினை அமைக்கும் நுண்ணறிவு **கலிலீயோ** என்னும் வான்நூலாசிரியர்க்கன்றி வேறெவர்க்கேனுந் தோன்றியதுண்டா? இல்லையே!

பின்னும் ஒருகால் அவ்வான்நூலாசிரியர் **தொலைவு நோக்கி** என்னும் ஒரு வியத்தகுகண்ணாடியினை அமைக்கும் முறை கண்டறிந்ததும் மிகவும் வியக்கற்பாலதாயிருக்கின்றது. மூக்குக்கண்ணாடி செய்யும் ஒருவர், தொலைவிலுள்ள பொருள்களைக் கட்புலனுக்கு அருகே காட்டும் ஓர் அரிய கருவியினை அமைத்து அதனை ஒரு செல்வர்க்கு வழங்கிய செய்தியைக், கலிலீயோ என்னும் அப்பேரறிஞர் ஒருநாள் தற்செயலாய்க் கேள்வியுற்றார். கேட்ட அந்நாள்முதல் அவர், அங்ஙனந் தொலைவிலுள்ளவைகளை அருகிற்காட்டுங் கருவியின் அமைப்பைத் தொடர்பாக ஆராய்ந்து செய்துசெய்து பார்த்துக், கடைசியாகத் 'தொலைவுநோக்கி' (Telescope) என்னும் புதுமையான கருவியை அமைத்து முடித்தார். அக்கருவியானது அமைக்கப்பட்ட பிறகுதான், எத்தனையோகோடி மைல்களுக்கு அப்பால் உள்ள ஞாயிறு திங்கள் முதலான உலகங்களின் இயல்புகளையும், அவைதமக்கும் எட்டாத் தொலைவிலுள்ள ஏனை வான்மீன் மண்டிலங்களின் இயல்புகளையும் எல்லாம் அவரும் அவர்வழிவந்த மற்றை வான்நூலாசிரியர்களும் நன்கறிந்து கண்டு நம்போல்வார்க்கெல்லாம் அவ்வுண்மைகளை நன்கு விளக்கிவருகின்றனர். கலிலீயோ என்னும் அவ் அறிஞர் பெருமானுக்கு அத்துணை விழிப்பான கருத்தும் ஓயாத ஆராய்ச்சியறிவும் ஆராய்ந்தவைகளைச் செய்துமுடிக்கும் விடாமுயற்சியும் இல்லாதிருந்தால், நாம் அம்மேலுலகங்களின் உண்மைகளை உணர்ந்துகொள்ளல் இயலுமோ? அவ்வுண்மைகளையறியாமல் அவ்வுலகங்களைப்பற்றிய வெறுங் குருட்டு நம்பிக்கைகளிலும் பொய்க்கதைகளிலுமன்றோ நம் வாழ்நாளை நாம் விலங்கினங்களைப்போற் கழிக்கவேண்டும்?

இன்னும் பாருங்கள்! “கூவல் ஆமை குரை கடல் ஆமையைப்” பார்த்துப் பழித்ததுபோலத், தாம் இருக்கும் நாட்டையும் அந்நாட்டிலுள்ள மக்களையுந் தவிர வேற்று நாடுகளையும் அந்நாடுகளில் உள்ள மக்களையும்பற்றிச் சிறிதுமே உண்மை தெரியாமல் அந்நாடுகளையும் அம்மக்களையும் இழித்துப் பேசுவோர் நம்மில் நூறாயிரக்கணக்காய் இருக்கின்றனர்! ஓர் ஊரைவிட்டு வேறு ஓர் ஊர் சென்று அதன் இயல்புகளையும் அங்குள்ள உயிர்களின் இயல்புகளையும் நன்குணர்ந்து அதன்கண் வாழ்க்கை செலுத்தவிரும்புவார் நம்மில் மிகச் சிலராகவே காணப்படுகின்றனர். தாமிருக்கும் ஊரில் தாம் உயிர்வாழ்தற்கு வேண்டுங் கருவிகள் கிடைக்கப்பெறாமல் வறுமைப்பட்டுத் துன்புறுவோரே அயல்நாடுகள் சென்று குடியேறக் காண்கின்றோம். இவ்வாறாக நம்மனோர் பெரும்பாலுந் தாமிருக்கும் இடத்தைவிட்டுப் பெயராத சோம்பர்களாயும், உலகத்தின் பல பகுதிகளையுங் கண்டு அறிவை அகலமாக்கும் விரிந்தநோக்கம் இல்லாதவர்களாயும் இருத்தலறிந்தே நம்பண்டை ஆசிரியர்கள் இந்திய இலங்கை நாடுகள் எங்குங் கடவுளை வணங்குதற்கென்று மாப்பெருங் கோயில்கள் அமைத்து, அம்முகத்தால் ஓர் ஊரவர் வேறு ஓர் ஊர்சென்று அன்பிலும் அறிவிலும் விரிந்த நோக்கத்திலும் மேன்மேற் பெருகுதற்கு வழிசெய்து வைத்தனர். வைத்தும், கடற்கப்பால் உள்ள நாடுகளுக்குக் கப்பலேறிச்சென்று ஆங்காங்குக் குடியேறக்கருதும் மனத்திட்பம் உடையார் நம்மில் இன்னும் மிகச் சிலராகவே இருக்கின்றனர். கப்பலேறிச்சென்றாற் கடலுக்கு இரையாவோம் என்னும் அச்சம் அவர்கள் உள்ளத்திற் குடிகொண்டிருக்கின்றது! அதுவேயுமன்றிக், கப்பலேறிச் செல்வாரைத் தமது சாதிக்குட் சேர்க்கலாகாது என்னுங் கட்டுப்பாடுஞ் சில வகுப்பிற் கடுமையாய் இருக்கின்றது! இதனாலேயே, நிலவளம் நீர்வளம் பொருள்வளம் நிரம்பிய பெரிய பெரிய நாடுகளிற் சென்று குடியேறி இனிது உயிர்வாழும் பெரும்பேற்றையும் உரிமையையும் இழந்து, நம் இந்து மக்களிற் பெரும்பாலார் சிறியசிறிய வெற்றூர்களிலிருந்து மிடிப்பட்ட குறுவாழ்க்கை செலுத்துகின்றனர்!

ஆனால், மேல்நாட்டவரான வெள்ளைக்கார நன்மக்களோ தாம் பிறந்த ஊர்களில் இருக்குமளவில் மனவமைதிபெறாத பெருநோக்கமும் பேரறிவும் பெருமுயற்சியும் பேரூக்கமும் அஞ்சா ஆண்மையும் வாய்ந்தவர்களாய் இந்நிலவுலகமெங்கும் உள்ள பெருநிலப்பரப்புகளை யெல்லாங் கடல்தாண்டிக்கண்டு கைக்கொண்டு அவை தம்மையெல்லாந் தமக்கு நீங்கா உரிமைகளாக்கி இன்பவாழ்க்கை செலுத்திவருகின்றனர். இவர்கள் இவ்வாறு இந்நிலவுலகமெங்கும் பரவி இனிது வாழ்தற்கு, இவர்கள் முன்னோரிற் சிலர் அறிவும் ஆராய்ச்சியும் எதனையும் உற்றுநோக்கி யெண்ணுதலும் அஞ்சா மன உறுதியும் விடா முயற்சியும் வாய்திருந்தமையே காரணமாகும். தாமிருக்கும் ஊரையும் அதற்கு அருகாமையிலுள்ள வேறு சில ஊர்களையுமன்றிச் சேய்மையிலுள்ளவைகளைச் சிறிதும் அறியாதவர்களாய் நம் இந்துமக்கள் மிடிப்பட்ட வாழ்க்கையில் இருக்க, மேல்நாட்டவரின் முன்னோர்களில் ஒருவரான **கொலம்பசு** என்பவரோ தாமிருந்த ஸ்பெயின் தேயத்தையடுத்த பெரும்புறக் கடலுக்கும் அப்பால் ஒரு பெருந்தேயம் உளதென்றறிந்து, மூவாயிரத்தைந்நூறு மைலுக்குமேல் அதனைக்கடந்து சென்று, கி.பி. 1492-ஆம் ஆண்டில் அமெரிக்கா தேயத்தைக் கண்டுபிடித்தார். அப்பெரும்புறக் கடலுக்கும் அப்பால் ஒரு பெருந்தேயம் உண்டென்பதைக் கண்ட அவரது ஆராய்ச்சியறிவின் தெய்வத்தன்மையை என்னென்றுரைப்பேம்! அதன் உண்மையை ஆராய்ந்துகண்ட அளவில் இராமல், தம்நாட்டு அரசற்கும் அரசிக்கும் அதனை மெய்ப்படுத்திக்காட்டி, மூன்று மரக்கலன்களும் நூற்றிருபஃது ஆட்களுந் தாம் அக்கடல் கடந்து செல்லுதற்கு உதவியாகத் தம் அரசர்பாற் பெற்றுக்கொண்டு, முன் எவருமே சென்றறியாத அப்பேராழியில் வழிகண்டு சென்ற அவர்தம் அறிவாற்றலையும் அஞ்சா ஆண்மையினையும் எண்ணுந்தோறும் எம் நெஞ்சம் அளவிலடங்கா இறும்பூதுந் திகைப்பும் அடைகின்றது!

இங்ஙனம் அப்பெரும்பௌவங் கடந்துசென்ற கொலம்பசுப் பெரியாரின் பேரறிவின் திறம், அவர்தாம் மேற்கொண்டு சென்ற அவ்வருஞ்செயலை எவ்வாறு பயன்[illegible]

210472

தென்பதும் நினைவுகூரற்பாற்று. பிறர்க்கு வழிதிசை தெரியாப் பெருவெள்ளக்காடான அப்பேராழியினூடே அவர் எவ்வாறு வழிதெரிந்து சென்றார் என்பதை நினைந்தால் எவர்க்குத்தான் வியப்பெழாது! எவர்க்குத்தான் நெஞ்சந் திகில் கொளாது! இவ்வளவு தெரிந்து சென்றதே ஒரு தெய்வத்தன்மை! இதனினுஞ் சிறந்த ஒரு தெய்வ அறிவும் இவரை அந்நடுக்கடலிற் காப்பாற்றியது. இவர் ஐந்து கிழமைகளாக அல்லது முப்பத்தைந்து நாட்களாக அப்பெருநீரில் அம்மூன்று கப்பல்களையுங் கொண்டு செல்கின்றார். வழிதுறை யொன்றுந் தெரியவில்லை! நாற்புறமுஞ்சூழ ஒரே வெள்ளக்காடு! தேடிச் செல்லுந் தேயஞ் சிறிதுந் தென்படவில்லை! அம்மூன்று மரக்கலங்களிலும் அவருக்கு உதவியாய்ச் சென்ற ஆட்களெல்லாரும் இனி நிலத்தைக் காண்போமா என்று ஏங்கி நம்பிக்கை யிழந்தார்கள்! தம்மை அப் பெருநீருக்கு இரையாக்கவே அவர் கொணர்ந்தாரென எண்ணி, எல்லாரும் அவரைத் துன்புறுத்தத் தொடங்கிவிட்டனர்! அந்நேரத்தில், எல்லை சிறிதுந் தெரியாத அப் பெருநீர்ப்பரப்பில், தமக்கு உதவியாய்வந்த துணைவர்களே நம்பிக்கையற்று மனங்கலங்கித் தம்மைத் துன்புறுத்துவராயின் அப்போது எத்தகைய நெஞ்சழுத்தம் உடையாருந் தந்நெஞ்சந் தடுமாறாதிருத்தல் ஏலுமோ? ஏலாதே; ஆனாலுங், கொலம்பசுப் பெரியார் அந்நேரத்திலும் உளஞ் சிறிதுந் தடுமாறிற்றிலர்! தமது கப்பலுக்கருகே கடற்பாசிகள் மிதந்து செல்வதை அவர் உன்னிப்பாய்ப் பார்த்து, "இதோ! நாம் தேடிச்செல்லுந் தேயம் அண்மையில் வந்துவிட்டது, அஞ்சாதீர்கள்!" என்று அவர்கள் எல்லார்க்கும் ஆறுதல் மொழிந்தார். அவர் மொழிந்தவண்ணமே சிலநாட்களில் அமெரிக்கா தேயக்கரை அம்மரக்கலங்களிற் சென்றாரெல்லார் கண்களுக்கும் புலப்படலாயிற்று! அப் பெருநீர்ப்பரவையில் ஆழாது தப்பிய அவரெல்லாம் உவகைக் கடலுள் ஆழ்ந்தனர்! அமெரிக்காக் கரையோரங்களில் உள்ள மலைப்பாறைகளில் ஒட்டி வளர்ந்த கடற்பாசி மிதந்து வருதலைக்கண்டு, அத்தேயத்தின் அருகே தாம் வந்துவிட்டதைக் கொலம்பசுப் பெரியார் அறிந்த அறிவு, அவருடன் சென்ற ஏனைமக்கட்கு இல்லாது

போயிற்றே! இதனால், எத்துணைச் சிறிய, எளிய, புல்லிய பொருளையும் புறக்கணித்து விடாமல், அதனையும் அதன் றொடர்பையும் உற்றுநோக்கியாராயும் அறிவுடையாரே எல்லா வகையிலுஞ் சிறந்தவராவர்என் றறிதல் வேண்டும்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

விளை நிலம்

நெற்பயிர் விளையாநின்ற வயல்நிலத்தையும் வயல்சூழ்ந்த இடத்தையும் 'மருதம்' என்று தமிழ்நூலார் பண்டைக்காலந் தொட்டு வழங்கிவருகின்றனர். பழையகாலத்தில் நெற்பயிரிடுதற்கேற்றவைகளாகத் திருத்தப்பட்ட நிலங்கள், மருத மரங்களின் அருகேயிருந்தமையாற் போலும், அவற்றிற்கு மருத நிலம் என அவர் பெயர் அமைத்தனர். வயல்நிலத்தைப் 'பண்ணை,' 'பணை,' 'செய்,' 'செறு,' 'கழனி,' 'பழனம்' 'விளையுள்,' 'புலம்,' 'வரப்புள்' என்னும் பல சொற்களால் தமிழ் மக்கள் வழங்கிவருகின்றனர்.

பழையநாட்களில் மாந்தரின்தொகை பெருகப்பெருக, அவர்களுக்கு வேண்டிய அளவு உணவுப்பண்டங்கள் மலைகளிலுங் கடல்களிலுங் காடுகளிலுங் கிடைப்பது அரிதாயிற்று. மலைகளிலுங் காடுகளிலும் உள்ள கனிகள் வித்துக்கள் கிழங்குகளையும் மான் மரை கடம்பை ஆடு மாடு பன்றி முதலிய விலங்குகளையுங், கானங்கோழி தாரா குயில் கொக்கு குருவி முதலான பறவைகளையுங் கடல்களிலுள்ள மீன்களையுந் தின்று வந்த மிகப்பழைய முன்னோர்கள், தமது தொகை பெருகப் பெருக அவை போதாமை கண்டு, ஆடுமாடுகளை மிகுதியாக வளர்த்து, அவற்றின் பயன்களான நெய் பால் தயிர் முதலியவைகளையுங், காடுகளில் ஆங்காங்கு இயற்கையாக வளர்ந்து கிடந்த அவரை துவரை மொச்சை காராமணி உழுந்து பயறு கடலை எள்ளு முதலான பண்டங்களையும் உட்கொண்டு உயிர் வாழ்ந்து வந்தார்கள். காலஞ் செல்லச்செல்ல அவர்களின் தொகை பின்னும் பின்னும் பெருகலானமையின், இயற்கையிற் கிடைத்த இத்தனை யுணவுப்பண்டங்களும் அவர்கட்குப்

போதா வாயின, இதற் கென்செய்வ தென்று, அவர்களுள் அறிவான்மிக்க சிலர் எண்ணிப் பார்க்கப்பார்க்க, இயற்கையாக வளருங் கூலங்களின் வித்துக்களைமட்டும் எடுத்து, வேறு மரஞ்செடிகொடிகள் இல்லாத வெளி நிலங்களைக் கீறி அவற்றுள் விதைத்தால், அவை மிகுதியான விளைச்சலைத் தருமெனக் கண்டறிந்தார்கள். அறிந்தபின் அவ்வறிஞர்களும் அவரது ஏவல்வழி நின்றவர்களும் வெட்டவெளியாய்க் கிடந்த நிலங்களைக் கோல்களாலுங் குந்தாலிகளாலுங் கிளறிக் கொத்தி, அவற்றின்கண் அவ்விதைகளை இட, அவை வேண்டியவளவு வெயிலும் மழையும் பெற்று, வேறு மரஞ் செடி கொடிகளின் இடைஞ்சல் இல்லாமையின், ஒன்று நூறாகப் பயன்தரலாயின.

இங்ஙனம் முதன்முதற் செயற்கைப் பயிர் செய்தற்கு வெளிநிலங்களே பயன்பட்டமையின், அவை 'வயல்' 'புலம்' என்று பெயர்பெறலாயின. வயல் என்னுஞ் சொல்லுக்கு முதற்பொருள் வெளியென்பதே யாகும். புலம் என்னுஞ் சொல்லும் எவை தம்மாலும் மறைக்கப்படாமற் கண்ணுக்குப் புலப்பட்டுக் கிடக்கும் வெளியிடத்தையே யுணர்த்தும். மேலும், இயற்கையில் வறிதாய்க் கிடந்த வெளிநிலம் அறிவர் சிலரால் முதன்முதற் கிண்டிக்கிளறிப் பயிர்செய்தற்கு ஏற்றபடியாகச் செய்யப்பட்டமையிற், பின்னர் அது 'செய்' என்றும், பண்ணப்பட்டமையிற் 'பண்ணை,' 'பணை' என்றுஞ், செறப்பட்டமையின் அதாவது கீறப்பட்டமையிற் 'செறு' என்றும் வழங்கப்படலாயிற்று.

இவ்வாறு முதலிற் றொடங்கிய பயிர்த்தொழிலைச் செய்யச்செய்ய, மேலும்மேலும் அதனைத் திறமாகச் செய்யும் வழிவகைகளை நம் முன்னோர்கள் கண்டறிந்தார்கள். வல்லென்று கெட்டியாயிருக்கும் நிலத்தில் மென்பதத்தவான நெல்லும் ஏனைமணிகளும் வேர் ஊன்றமாட்டாமற் பட்டுப்போதல் கண்டு, வன்பாலான நிலத்தை மென்பாலாக்கும்முறை கண்டு கொண்டார்கள். நிலத்தைக்கிளறி அதற்குத் தண்ணீர் பாய்ச்சினால் மண்ணுந் தண்ணீருங் கலந்து அது மென்பதப் படுதல் அறிந்தனர். இங்ஙனங் கிளறுதலாலுந் தண்ணீர் பாய்ச்சுதலாலும் இறுகிய மண் கழன்று நிலம் மென் பதம் அடைதலின், அங்ஙனங் கழன்ற வயல்நிலங் 'கழனி' எனப்பட்டது.

அதன்மேற், பண்படுத்தப்பட்ட அக்கழனியில் வித்திய நெல் ஒன்று பல்லாயிரமாய்ப் பயன்தந்ததாகலிற், பின்னர் அது 'பழனம்,' 'விளையுள்' எனப் பெயர்பெறலாயிற்று. பயன், பழம், பழன், விளைவு முதலியன வெல்லாம் ஒரேபொருளைத் தருஞ் சொற்களாகும்.

அங்ஙனம் விளைந்த நிலம் முதலிற் பலர்க்கும் பொதுவாயிருந்ததனால், அதன் விளைவை அவரெல்லாருந் தத்தமக்கு வேண்டியவளவு பங்கிட்டுக்கொண்டு வைத்து வாழ்ந்தார்கள். பிறகு நாட் செல்லச்செல்ல, நன்றாக உழைத்துப் பாடுபடுபவர்களும், பாடுபடாமற் சோம்பலுற்றிருப்பவர்களும் விளைந்த பொருள்களைத் தாந்தாம் வேண்டும்மட்டும் எடுத்துக்கொள்ள விடுதல் முறையாகாதென்று உணர்ந்தனர். உணர்ந்து, அவரவர் எவ்வளவு பாடுபடக்கூடுமோ அவ்வளவு பாட்டுக்குத் தக்க நிலத்தையளந்து வரம்புகட்டி அவரவர்க்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். முதலிற் பலர்க்குப் பொதுவாய்க் கிடந்த நிலப்பரப்புப் பின்பு ஒவ்வொருவர்க்கோ அல்லது ஒவ்வொரு குடியினர்க்கோ உரியவாம் பல பகுதிகளாகப் பங்கிடப்பட்டு, இடையிடையே வரம்பு உயர்த்தப்பட்டமையின், அவ்வாறு வரம்புக்கு உள்ளடங்கிய வயல்கள் 'வரப்புள்' என்று வழங்கப்படுவவாயின. 'வரம்பு' என்பது வரப்பு என வலித்தது. இவ்வாறாகத் தமிழில் வயல்நிலத்திற்கு வழங்கும் பல சொற்களையும் ஆராயவே, பண்டைக்காலத்திருந்த தமிழ் முதுமக்கள் முதன்முதற் பயிர்த்தொழில் எவ்வாறு செய்ய அறிந்து, அதனை எவ்வாறு செய்து, எவ்வாறு பயன்படுத்தி இன்றுகாறும் வாழ்ந்துவருகின்றனர் என்னும் வரலாறு நன்கு விளங்குதல் கண்டுகொள்க.

இனித், தொன்றுதொட்டுப் பயிர்த்தொழிலைப் பெருக்கி வாழும் உழவு வாழ்க்கை, தமிழ் மக்களிடம் மிகுந்து காணப்படுதல்போல, உலகத்திலுள்ள வேறு எந்த மக்களிடத்தும் மிகுந்து காணப்படவில்லை. மற்றை மாந்தர்கள் தத்தம் நாடுகளின் சிற்சில பகுதிகளிலேதாம் உழவுதொழிலை நடத்திவரக்

காண்கின்றோம். மற்றுத், தமிழ்மக்களோ தாம் உறையும் இத்தென்னாடு முழுதும் நெற்பயிரும் பிறபயிரும் விளைத்து இனிது வாழ்ந்துவருகின்றனர். இத்தமிழ் நாட்டின் வடவெல்லையாகிய திருவேங்கடமலையி லிருந்து, தென்கோடியாகிய குமரிமுனை வரையிலும், கீழ்கரை மேல்கரை வரையிலும் எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென விளங்கும் நெல் வயல்களே நிறைந்து காணப்படுகின்றன. இதற்குக் காரணம் என்னென்றால், தமிழ்நாட்டின்கண் ஆறுகளுங் குளங்களும் ஏரிகளுங் கால்வாய்களும் மிகுந்திருத்தலேயாகும்; வேறு நாடுகளிலோ அவை அங்ஙனம் மிகுந்திருக்கவில்லை. வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை, காவிரி, வைகை, பொருநை, நெய்யாறு முதலியன ஊடே ஊடே நீர்நிரம்பி யோடுதலும், இவற்றால் நீர் ததும்பிப் பொலியுங் குளங்களுந் தாமரைவாவிகளும் பெரிய பெரிய ஏரிகளும், அவற்றிலுள்ள நீரைக் கொண்டுசென்று கோடிக் கணக்கான வயல்களை ஊட்டுங் கால்வாய்களும் இத்தென்னாட்டின்கண் அடுத்தடுத்துக் காணப்படுதல் போல வேறெங்குங் காணப்படுதல் இல்லை. சோழநாட்டிற்கு ஓர் உயிராய் நின்று நிலவுங் காவிரியாறு, நெடுந்தொலைவிலுள்ள மேற்கரைமலைகளிலிருந்து திரட்டிக் கொணரும் வண்டல்கள் அந்நாட்டின் வயல்களிலும் படுகர்களிலும் படிந்து நிலத்தை மிகவுஞ் செழுமையுறச் செய்கின்றன. பாண்டிநாட்டில் ஓடும் வைகை பொருநை முதலான ஆறுகளுங், காவிரியாற்றிற்கு அடுத்தபடியாக, அந்நாட்டின் மருதநிலங்களை வளம்படுத்துந் தன்மையவாகவே யிருக்கின்றன. இங்ஙனமாக இத்தென்னாட்டின் இயற்கை யமைப்புப் பயிர்த் தொழிலுக்குப் பெரிதும் ஏற்ற பல நலங்களும் பொருந்தி யிருத்தலால், எத்தனையோ ஆயிர ஆண்டுகளாக இதன்கண் உயிர்வாழுந் தமிழ்மக்கள் அத்தொழிலைச் செவ்வையாக நடாத்திக்கொண்டு இனிது காலங்கழித்து வருகின்றனர்.

இன்னும், இத்தென்னாட்டின்கண் உள்ள மருதநிலங்களில் நெற்பயிர்மட்டுமே யன்றித், தென்னஞ்சோலைகளும் மாந்தோப்புகளுங் கமுகந் தோட்டம் வாழைத் தோட்டங்

களும், எலுமிச்சை நாரத்தை பலா கரும்பு முதலியன செழித்திருக்குந் தோட்டக்கால்களும், இஞ்சி மஞ்சள் மிளகாய் சேம்பு கருணை முதலியன வளர்ந்திருக்குங் கொல்லைகளுங் கண்ணையுங் கருத்தையுங் கவரும் வனப்பும் பயனும் மிக்கனவாய் ஆங்காங்கு அடர்ந்து காணப்படுகின்றன. உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத இத்தனை உணவுப்பண்டங்களும் எளிதிலே விளைத்துக்கொள்ளுதற்கேற்ற வசதிகள் இயற்கையே அமையப்பெற்ற இத்தென்னாட்டவர்கள், தமக்குச் சிறப்பாக உரிய வுழவுதொழிலை மேன்மேற் செவ்வையாகச் செய்து வருவார்களானால், அவர்கள் ஏனைநாட்டு மக்களைச் சார்ந்து பிழைக்கவேண்டியதிராது. மற்றைத் தொழில்களைச் செய்யும் மற்றை நாட்டவர்களே இத்தென்னாட்டவர் உதவியை எதிர்பார்த்துப் பிழைக்கவேண்டியவராவர்.

“சுழன்றும் ஏர்ப்பின்னதுலகம் அதனால்
உழந்தும் உழவே தலை”

ஓநாயுங் கொக்கும்

ஓர் ஓநாயானது தன் தொண்டைக்குட் குறுக்கே மாட்டிக்கொண்ட ஓர் எலும்பை எடுத்துவிடும்படி, அங்கும் இங்குமாய் மிகவுந் துன்புற்று ஓடித், தான் எதிர்ப்பட்ட ஒவ்வொரு விலங்கையுங் கெஞ்சிக்கேட்டது. அங்ஙனங் கெஞ்சிக்கேட்கும்போதெல்லாந் தனக்கு அவ்வுதவியைச் செய்யும் உயிர்க்குத் தான் தன்னாலான கைம்மாறு ஒன்றுஞ் செய்வதாகக் குறிப்பித்தது. கடைசியாக ஒரு கொக்கு அதன் துன்பத்தையும் வேண்டுகோளையுஞ் சொல்லுறுதியையுங் கண்டு மனம் இரங்கித், தனது நீண்ட கழுத்தோடு கூடிய அலகை அவ்வோநாயின் தொண்டைக்குள் துணிவாக நுழைத்து, அங்கே மாட்டிக்கொண்டிருந்த எலும்பை வெளியே இழுத்துவிட்டது. அவ்வாறு செய்தபிறகு அது தனக்கு ஓநாய் கைம்மாறாகத் தருதற்கு இசைந்ததனைத் தரும்படி அடக்கமாய்க் கேட்டது. உடனே அவ்வோநாய் பல்லை இளித்துக்கொண்டு, “நன்றிகெட்ட உயிரே, ஓர் ஓநாயின் வாய்க்குள்ளே நுழைத்த உனது கழுத்துத் துண்டாக்கப்படாமல் நல்லபடியாய் வெளி

வந்ததே போதாதோ! இதனிலுஞ் சிறந்த கைம்மாறொன்றும் உனக்கு வேண்டுமோ!" எனச் சினத்துடன் கூறியது.

தீயவர்கட்கு உதவி செய்பவர்கள், அவ்வுதவிக்குக் கைம்மாறாக அவராற் பழிக்கப்படுவரேயன்றி வேறு எதிருதவியொன்றும் பெறார்கள்.

ஒரு பருந்துஞ் சில புறாக்களும்

சில புறாக்கள் நெடுநாளாக ஒரு பருந்துக்கு அஞ்சியபடியாய்க் காலங்கழித்து வந்தன. அவை தாம் உறையுங்கூட்டை விட்டுத் தொலைவிற் செல்லாமல் அதற்கு அருகாமையிலேயே மேய்ந்துகொண்டு விழிப்பாயிருந்தமையால், அவை அப் பருந்தின் பிடியுள் அகப்படாமல் உயிர்தப்பி வாழ்ந்தன. அப் பருந்தோ தனது விருப்பம் நிறைவேறாமை கண்டு, அவற்றைத் தனக்கு இரையாக்கிக்கொள்ள ஒரு சூழ்ச்சிசெய்து அப்புறாக்களை நோக்கி, "நீங்கள் ஏன் இவ்வாறு எந்நேரமுங் கவலையிலுங் கலக்கத்திலும் நாட்கழித்து வருகின்றீர்கள்? நீங்கள் என்னை உங்களுக்கு அரசனாக ஏற்படுத்திக்கொண்டால், எத்தகைய இடையூறும் உங்களுக்கு வாராமல் உங்களைப் பாதுகாப்பேன்." என மொழிந்தது. அப் பருந்தின் சொற்களை நம்பிய அப்புறாக்கள், அதனைத் தமக்கு அவ்வாறே அரசனாக்கிக் கொண்டன. அங்ஙனம் அரசனான பிறகு அப்பருந்து ஒருமிக்க அவைகளை இரையாக்கிக்கொள்ளாமல், நாடோறும் ஒவ்வொரு புறாவாகப் பிடித்து அவைகளைத் தின்றுவந்தது. நாளடைவில் எல்லாப் புறாக்களும் இங்ஙனம் அதற்கு இரையாகிப்போகக், கடைப்படியாக எஞ்சிநின்ற புறவு அதற்கு இரையாகப்போகுந் தறுவாயில், "ஆ! நாங்கள் செய்த ஏற்பாட்டுக்குத் தக்கது எங்கட்குக் கிடைத்தது!" என்று சொல்லி உயிர்துறந்தது.

ஆகவே, கொடியோன் ஒருவனைத் தாமாகவே தெரிந்தெடுத்து அவற்குப் பெருவல்லமையைத் தந்துவைப்பவர்கள், பிறகு அவனால் துன்புறுத்தப்பட்டால், அதற்காக அவர்கள் வியப்படைதல் எற்றுக்கு?

இரண்டு பண்டப்பைகள்

ஒவ்வோர் ஆடவனுந் தனக்கு முன்னே ஒரு பையுந் தனக்குப்பின்னே ஒருபையுந் தொங்கவிட்டுக்கொண்டு செல்கின்றான்; அவ்விரண்டு பைகளிலுங் குற்றங்களாகிய பண்டங்களே நிறைந்திருக்கின்றன. அவ்விரண்டில் அவன் மார்பின் முன்னே தொங்கும் பையிற் பிறருடைய குற்றங்களே நிரம்பியுள்ளன. அவற்குப்பின்னே அவன் முதுகிற்றொங்கும் பையிலோ அவனுடைய குற்றங்களே நிறைந்திருக்கின்றன. ஆகவே, ஒவ்வொருவரும் பிறருடைய குற்றங்களை நோக்குங் கட்பார்வையுடையராயுந், தம்முடைய குற்றங்களைப் பாராக் கண்ணில் குருடராயும் இருக்கின்றனர்.

குடியானவனும் பாம்பும்

மழைகாலத்தொருநாள் ஒரு குடியானவன் தன் வீட்டுக்குத் திரும்பிவருகையில் வழியில் வேலியண்டை ஒரு பாம்பு குளிரால் விறைத்துக் கொத்துயிருங் கொலையுயிருமாய்க் கிடத்தலைக் கண்டான். கண்டவன் அதன்பால் இரக்கம் உடையோனாய், அதனையெடுத்துத் தன் மார்பில் அணைத்தபடியாய்த் தன் வீட்டுக்குக் கொணர்ந்து, அடுப்பண்டையில் வைத்து அதற்குச் சூடேற்றினான். உடம்பிற் சூடேறியவுடனே அது சுருசுருப்பு வாய்ந்ததாகி, அக்குடிசைவீட்டி லிருந்த அவன் பிள்ளைகள்மேற் சீறிச் செல்லலாயிற்று. அதுகண்ட அக்குடியானவன் அந்நச்சுயிருக்குத் தான் இரங்கியது தப்பாதல் உணர்ந்து, உடனே ஒரு தடியால் அதனை அடித்துக் கொன்றான்.

"பாங்கறியாப், புல்லறிவாளர்க்குச் செய்தவுபகாரங்
கல்லின்மேல் இட்ட கலம்."

உறைநீர்க்கட்டிமேல் உடல்பருத்தமாது

உருசியா தேயத்தின் வடபகுதிகளிற் பனியின் கடுமை மிகுதியாய் உண்டு. அதனால் அந்நாட்டின் நிலமும் ஏரியுமெல்லாம் பனி நிறைந்து இறுகியிருக்கும். பனிக்கட்டி நிறைந்த நிலமும் ஏரியுங் கெட்டியாய் வழுவழுப்பாக இருத்தலால்,

அவற்றின்மேல் அந்நாட்டு மாந்தர்கள் சறுக்கிநடக்கும் விளையாட்டு விளையாடுதல் வழக்கம். ஒருகால் உடல்பருத்த மாது ஒருத்தி ஓர் ஏரியின் தண்ணீர் உறைந்து கெட்டியாகி அதன் மேற்பரப்பு வழுவழுப்பாய் இருக்கப் பார்த்து, அதன்மேற் சறுக்கிவிளையாடச் சென்றாள். அங்ஙனம் அவள் விளையாடத் தொடங்கிய சிறிது நேரத்திலெல்லாங் கால்வழுக்கி அதன்மேற் பொதீரென வீழ்ந்தாள். வீழ்ந்தவள் தன் உடலின் சுமையால் எழுந்துநிற்கமாட்டாமல், அப்பனிப்பரப்பின் மீதே துயரத்தோடும் உட்கார்ந்திருந்தனள். அப்போது அவள்பக்கமாய் அங்கே சறுக்கி விளையாடிக்கொண்டுவந்த ஒருவன் அவளைக் கண்டு இரங்கி, அவள் எழுந்துநிற்குமாறு தூக்கி உதவிசெய்து, ''அம்மே, இதுதான் முதன்முதலாக நீங்கள் சறுக்கி விளையாடியதுபோலும்!'' எனக் கூறினான். அதற்கு அம்மாது, ''இல்லை, இது முதன்முறை அன்று; இதுதான் எனக்குக் கடைசிமுறை!'' என்று மொழிந்து அவற்கு நன்றிசெலுத்திப் போனாள்.

பன்றி எண்ணிக்கை

இருபது பன்றிகள்வைத்து வளர்த்துவந்த ஓர் ஒட்டன் ஒருநாள் தன்கீழ் வேலைபார்க்கும் ஒருவனையழைத்துப், பன்றிக்குடிசையிற் பன்றிகள் இருபதும் இருக்கின்றனவாவென்று பார்த்துவரும்படி ஏவினான். அவ்ஏவலன் அங்ஙனமேசென்று, திரும்பி முகத்திலே திகைப்புக்குறி தோன்றத் தன் தலைவனிடம் வந்தான். வந்தவனைத்தலைவன், ''நல்லது, பன்றிகளெல்லாந் தவறாமல் இருக்கின்றனவா?'' என வினவினான். ''ஆ! ஐயா, பத்தொன்பது பன்றிகளைப் பிசகாமல் எண்ணினேன்; ஆனால், ஓர் இளம்பன்றி மிகவிரைந்து ஓடினமையால், அதனையான் எண்ணக் கூடவில்லை'' என்றான். அச்சொற் கேட்ட தலைவன் அவ்ஏவலனது மடமையைப்பார்த்து நகைபுரிந்தான்.

திறமையுள்ள நாய்

ஒருகால் ஒரு செல்வர் தாம் வளர்க்கும் நாயைத் தமது பக்கத்தில் வைத்துக்கொண்டு தமது குதிரைவண்டியில் ஒரு

கடைக்குச் சென்றார். கடையண்டை சென்றதும், வண்டியை நிறுத்தி, நாயை வண்டியிலேயே யிருக்கும்படி செய்துவிட்டு, அவர் அக்கடையினுள்ளே நுழைந்தார். அப்போது குதிரை தெருவில் எதனையோகண்டு மிரண்டு, வண்டியை யிழுத்துக் கொண்டு நாலுகாற்பாய்ச்சலில் ஓடலாயிற்று. அதன் கடிவாளவார் தெருநெடுகக் கூடவே இழுப்புண்டது. வண்டிக்குள்ளிருந்த நாயோ தன் வண்டிக்குதிரை தலைகால் தெரியாமல் ஓடுதலைக்கண்டதுந் திடுமெனக் கீழேகுதித்து, நிலத்தே இழுபட்டுச்செல்லுங் கடிவாளவாரைத் தனது வாயினாற் கௌவிப் பிடித்துக்கொண்டது. குதிரை சிறிதுவழி அந் நாயையும் இழுத்துச்சென்றதாயினும், நாய் தான் கௌவிய கடிவாளவாரை விடாப்பிடியாய்ப் பிடித்து இழுத்தமையாற் குதிரை கடைசியாக நிற்கவேண்டுவதாயிற்று. இங்ஙனம் அந்நாய் செய்யாதிருந்தால், அக்குதிரை தான் வெருண்டோடும் ஓட்டத்தால் தான் இழுத்துச்செல்லும் வண்டியை எங்காயினும் மோதிச் சுக்கல்சுக்கலாய் உடைத்திருக்கும்; தானும் எங்காயினுந் தடுமாறி விழுந்து கால்முறிந்திருக்கும். இடர்ப்பட்ட நேரத்தில் தன்நாய் செய்த இப்பேருதவியை நினைந்து நினைந்து வியந்து அதன் தலைவன் அதனைப் பெரிது பாராட்டினான்.

பழக்கத்தின் வலிவு

இவ் இந்தியநாட்டின் ஒரு கடற்கரைப்பக்கத்து மேட்டுக் குப்பத்தில் உயிர்வாழுங் கரையாரப்பெண்கள் சிலர் தாம் கொண்டுபோன மீன்களை ஓர் அங்காடியில் விற்பனை செய்துவிட்டுத், தமது இல்லம் நோக்கி மாலைப் பொழுதில் திரும்பி வருகையில், இடியுங் காற்றும் மழையும் வந்துவிட்டன. நடுவழியில் இவ்வாறு நேரவே, அவர்கள் அவ்வழியின் ஓரமாய் இருந்த ஒரு பூந்தோட்டத்தினுள் நுழைந்தார்கள். அத்தோட்டக்காரன் அப்பெண்கள் மழையிலுங் காற்றிலும் அகப்பட்டு வருந்துதல்கண்டு நெஞ்சம் இரங்கித், தனது ஓலைவீட்டினுள்ளே நறுமணங்கமழும் மலர்கள் குவிக்கப்பட்டுள்ள ஓர் அறையின் ஒருபக்கத்தே அவர்கள் தங்கியிருக்கும்படி உதவி செய்தான். சுமை சுமந்து நடந்தமையால் அலுப்புற்ற அச்செம்

படவ மாதர்கள் உறங்குதற்காகக் கீழே படுத்தார்கள். ஆனால், அவர்களுக்கு அருகாமையிற் குவிக்கப்பட்டிருந்த மலர்க் குவியலிலிருந்து வரும் இனியமணம் அவர்களது மூக்குக்குப் பிடியாமையால் அவர்கள் தூங்கக்கூடவில்லை. சிறிது நேரம் வரையிற் பார்த்துவிட்டுப், பிறகு அப்பெண்கள் கவிச்சிநாற்றம் நாறுந் தம்முடைய மீன்கூடைகளைக் கொணர்ந்து தமது மூக்கண்டையிலே வைத்துக்கொண்டு நன்றாய்க் குறட்டையிட்டுத் தூங்கலாயினர். பழக்கங்கொடிதென்பது இதனால் நன்குபுலப் படுகின்றதன்றோ?

அருளுடையூழியம்

ஏழைப் பெற்றோர்களுக்குப் பிள்ளையாய்ப் பிறந்த **பாரி** என்னும் பிரஞ்சுக்கார இளைஞன், பாரிசுமாநகரத்திலுள்ள மருத்துக்கழகத்திற் கலைபயின்று, அதிற்றேர்ந்தபின், ஓர் ஏழை மருத்துவரின்கீழ் மருத்துவ ஊழியஞ் செய்ய அமர்ந்தனன். அமர்ந்து சிறிது காலஞ் சென்றபின், தனது நாட்டுப் படைஞர்க்குப் புண்மருத்துவம் பார்க்குந் தொழிலில் அவன் அமர்த்தப்பட்டான். அக்காலத்தில், அதாவது அவன் உயிர்வாழ்ந்த பதினாறும் நூற்றாண்டில், வெடிகுண்டுபட்ட படைஞரின் புண்களுக்குக் கொதிக்கக்கொதிக்கக் காய்ச்சிய எண்ணெயை விட்டு, அவற்றை ஆற்றுவது வழக்கமாய் நடந்துவந்தது. முன்னமே வெடிகுண்டுகளால் துளைக்கப்பட்டு ஆற்றொணாத் துயர் உழக்கும் படைஞரின் காயங்களுக்குக் கொதிக்கக் காய்ச்சிய எண்ணெயைச் சுடச்சுடச் சொரிந்தால், அது பின்னும் அவர்கட்கு எவ்வளவு கொடிய துன்பத்தைத் தந்திருக்கும்! இத்தகைய அருள் இல்லாக் கொடிய மருத்துவத்தைத் தமது கண்ணெதிரே கண்ட பாரி என்னும் அவ்விளைஞர்க்கு நெஞ்சம் நீராய் உருகியது! இக்கொடிய முறையை அறவேயொழித்து விட்டுப், படைஞர்க்குத் துன்பம் பயவாமற் செய்யும் மருத்து முறை எதுவென்று ஆராய்வதில் அவரது உள்ளம் இரவும் பகலும் ஈடுபட்டது. இரக்க நெஞ்சம் வாய்ந்தாரது எண்ணம் நிறைவேறுதற்கு இறைவனே துணைநிற்பன். ஒருநாள் வழக்கம்போலப் படைஞரின் புண்களுக்கு இடும்பொருட்டு

எடுத்துக்காய்ச்சிய எண்ணெய் எல்லார்க்கும் போதாமல் ஒரு சிலர்க்கே போதுமா யிருந்தது. அதனால் மற்றைப் பலரின் காயங்கள் எண்ணெய் இடாமலே விடப்பட்டன. அங்ஙனம் எண்ணெய் இன்றி விடப்பட்டவர்களைப் பாரி மருத்துவர் அடுத்தநாட்சென்று உற்றுநோக்குகையில், எண்ணெய் இடப் பட்டவர்களைவிட அஃது இடப்படாதவர்களே நல்ல நிலைமையில் இருக்கக்கண்டார். அதுமுதற், கொதிக்கும் எண்ணெயையிட்டுக் கட்டும் அக்கொடிய முறையை யொழித்து, வேறு இனியமுறைகளாற் காயம் ஆற்றும் முறைகளைக் கையாண்டு, அவர் படைஞரின் புண்களை விரைவில் இனிதாக ஆற்றியதுடன், தாம் கையாண்ட இனிய புது முறைகளை விளக்கியும் அவர் அரியதொரு நூல் இயற்றினார்.

இன்னும் அக்காலத்திற் கைகால் முறிந்துபோன படைஞர்க்கு, முறிந்த உறுப்புகளைத் தறித்தபின், மிச்சமாய் நிற்கும் உறுப்பின் முனைகளிற் பழுக்கக்காய்ச்சிய இரும்பை வைத்து, அவற்றைத் தீய்க்கும் அறக்கொடிய மருத்துவமும் வழக்கமாய் நடந்துவந்தது! உயிரைப் பெருந்துன்பத்திற் படுப்பிக்கும் இக்கொடிய முறையைக் கேட்பினும் எம் குலை நடுங்குகின்றது! அதனை நேரிருந்து கண்ட மெல்லிய உள்ளத்தினரான பாரி மருத்துவர்க்கு அக்கொடுமை எவ்வளவு துடிதுடிப்பினைத் தந்திருக்கும்! இக்கொடிய முறையினையும் அவர் உடனே நிறுத்தித், தறிபட்டு எச்சமாய் நிற்கும் உறுப்புகளின் இரத்த நரம்புகளிலிருந்து இரத்தம் வெளியே பெருகி விழாதபடி அவைகளைப் பட்டுக்கயிறு கொண்டு கட்டி மருந்திட்டு இனிதாக விரைவில் ஆற்றினார்.

இன்னும் ஒருகால் ஒரு மறவர், தமதுடம்பிற் பத்து இடங்களிற் கத்திவெட்டுப் பட்டு, உணர்விழந்து கிடந்தார். அவரைக் கண்ட பிறர் அவர் இறந்துபோனாரெனவே கருதி, அவரைப் புதைத்துவிடுதற்கு வேண்டும் ஏற்பாடுகளெல்லாஞ் செய்யலாயினர். ஆனால், அம்மறவரைச்சென்று உற்றுநோக்கிய பாரி மருத்துவரோ, அவர்க்கு உயிர்போகவில்லையென

உறுதிமொழி புகன்று, சிறிது நேரத்தி லெல்லாம் அவரை யுயிர்ப்பித்து, அவருடைய வெட்டுக்காயங்களையுஞ் சில நாட்களில் ஆற்றினர்.

இங்ஙனம் எல்லாம் பாரி மருத்துவர் தமக்குச் செய்து வந்த அருள் மருத்துவ முறைகளுக் காக நன்றி செலுத்த விழைந்த அப்படைஞர்கள் தாந் தாமும் மனம் உவந்து கொடுத்தபொருளைத் திரட்டித், திரட்டிய பெரும்பொருளை அவர்க்குக் காணிக்கையாகச் செலுத்தினர்.

கோட்டையைக்காத்த கோதை

கனடாநாட்டிற் பிராஞ்சுக்காரர்க்கு உரிய 'வேர்ச்செரி' என்னுங் கோட்டையை 1690-ஆம் ஆண்டில் 'இருக்கோய' வகுப்பினர் சிலர் வந்து தாக்கலாயினர். தாக்கவந்த அவர்கள் ஏதோர் அரவமுஞ் செய்யாமல் மதின்மேல் ஏறி எளிதிலே உட்குதித்து விடுதற்கு ஏற்பாடு செய்துகொண்டு, அதன்படியே மதில்மேல் ஏறினர். ஏறியதும், உள்ளிருந்து போந்த துப்பாக்கிக்குண்டுகளைக் கண்டு, அவர்கள் வியப்புற்று, மதிலைக் கடக்கமாட்டாதவர்களாய்ப் பின்னிடைந்தனர். திரும்பவும் அவர்கள் அம் மதின்மேற்செல்லத், திரும்பவும் போந்த துப்பாக்கிக் குண்டுகளின் முன் நிற்கமாட்டாதவர்களாய்த் திரும்பவும் பின்முதுகு காட்டினர். அக்கோட்டையின் அகத்தே எவ்விடத்துங் காணப்பட்ட மாது ஒருத்தியைத்தவிர வேறு படைஞர் ஒருவரும் அதனுட் காணப்படாமையும், அங்ஙனமிருந்தும் பலமுகமாகத் துப்பாக்கிக்குண்டுகள் வந்து வீழ்ந்தமையும் நினைந்து அவர்கள் பெரிதும் இறும்பூதுற்றனர். பெண்பாலரைத்தவிர வேறு எவராலும் அக்கோட்டை காக்கப்படவில்லையென்னுஞ் செய்தியே, அவ் இருக்கோய வகுப்பினர் அடுத்தடுத்துப் படைமேற்கொண்டுவந்து அக்கோட்டையைத் தாக்கும்படி செய்தது. தாக்கியும் என்! தாக்கிய ஒவ்வொரு முறையும் அவர் தோல்வியடைந்தனரே யன்றிச் சிறிதும் வெற்றிபெற்றிலர். கடைசியாக அவர்கள் இரண்டுநாள் வரையில் அக்கோட்டையை முற்றுகையிட்டும், அதனைப் பிடித்துக் கொள்ள மாட்டாதவர்களாய்ப் பின்வாங்கியே போயினர்.

இவ்வாறு மறித்துமறித்தும் வந்து அக்கோட்டையைத் தாக்கிய அவர்களை உட்புகவிடாமல் உள்நின்று எதிர்த்து முதுகு காட்டி யோடச் செய்தவள் கோதை யொருத்தியே யாவள். இந்த அம்மை, ஒரு முழுப்படையின் துணைகொண்டவள் போல் அஞ்சா ஆண்மையுடனும் மனத்திட்பத்துடனுந் தான் ஒருத்தியே அக்கோட்டையின் பலவிடங்களிலுந் தோன்றித் தோன்றி நின்று பகைவரை மிகவும் அச்சுறுத்தினள்.

மறுபடியும் இரண்டாண்டுகள் கழித்து அவ் இருக்கோய மக்கள் அக்கோட்டையைத் தாக்கவந்த போது, அக்கோட்டைத் தலைவரின் மகளான பதினான்கு ஆண்டுடைய சிறுமி யொருத்தியே, அவர்கள் உள் நுழைய ஓர் அடி யெடுத்து வைக்கும் நேரத்திற்குள் ஓடிச்சென்று அதன் வாயிற்கதவைச் சார்த்திச் செவ்வையாக அடைத்துவைத்தவள் ஆவள். இந்தச் சிறுமியும் ஒரு மறவரும் அல்லாற் பிறர் எவரும் அதனை அப்போது காத்தற்கு அங்கிருந்திலர். அங்ஙனமிருந்தும், அச் சிறுமி வேளைக்கு வேளை தன் உடையை மாற்றி, அக்கோட்டையினுட் பலமுகத்துஞ் சுற்றிச்சுற்றிச் சென்று, பகைவர்கள் மேல் துப்பாக்கிக் குண்டுகளை நேரமுங் குறியுந் தவறாமல் ஏவிவந்தமையால், உள்ளே ஒரு பெரும்படையிருந்து தம்மை எதிர்ப்பதாகவே கருதி, அப்பகைவர்கள் நெஞ்சந் தளர்ந்து வெற்றிபெறாமல் மறித்துந் திரும்பிப்போயினர். இங்ஙனமாக அச்சிறுமிசெய்த செயற்கருஞ் செயலன்றோ அவ் அரணத்தைக் காப்பாற்றியது?

மறைபொருட் காட்சி

1725-ஆம் ஆண்டிற் போர்த்துக்கேசிய மாது ஒருத்தியைப்பற்றிய செய்தியானது, இயற்கைப்பொருள் அறிஞர்க்குப் பெருந்திகைப்பையும் பெருங்குழப்பத்தையும் உண்டுபண்ணியது. அம்மாதுக்கு மறைந்துள்ள பொருள்களைக் கண்டறிந்து உரைக்கும் ஆற்றல் நிரம்பவுள்ளதென்னுஞ் செய்தி எங்கும் பரவியது. அந்த அம்மை வேறோர் உதவியும் நாடாது தன் கண்களால் நிலத்தை உற்றுநோக்கிய அளவில், அந்நிலத்தின் கீழ் உள்ள மண்ணடுக்குகளையும், அவை ஒன்றுக்கொன்று

எவ்வளவு தொலைவில் உள்ளனவென்பதையுஞ் சிறிதும் பிழைபடாமற் சொல்லிவிடுவள். அதுமட்டுமேயன்றி, அவள் ஒருவரது உடம்பை உற்றுப்பார்ப்பளாயின், அவ்வுடம்புக்குள் ஓடும் இரத்தத்தையும், இரத்தநரம்புகளையும், எலும்புகளையும், உள்ளே அங்கங்கு நோய்ப்பட்டிருக்கும் இடங்களையுந் தெளிவாய்க் கண்டு, அவைகளைப் பிறர்க்கு நன்கெடுத்துரைப்பள். கருக்கொண்டிருக்கும் மங்கையர் அவள்பாற் சென்று, தமக்குப் பிறக்கும் பிள்ளை ஆணோ பெண்ணோ என்பதைத் திட்டமாய்த் தெரிந்துகொள்வர்; பிறந்த பிள்ளையும் அவள் முன்னறிந்து சொன்னபடியேதான் இருக்கும்.

அஞ்ஞான்றிருந்த போர்த்துக்கல் தேய அரசர் தாம் புதிதாகக் கட்டுவித்த அரண்மனைக்கு வேண்டியவளவு நல்லதண்ணீர் பெறுதற்பொருட்டுப் பல இடங்களை அகழ்ந்து பார்த்தும் நன்னீர் கிடைத்திலது. அதனால் அவர் உளங்கலங்கி வருந்துகையில், அறிந்தார் சிலர் சொல்லக்கேட்டு, மேற்குறிப்பிட்ட மாதைத் தம்பால் வருவித்துத், தமதரண்மனைக்கு வேண்டுமான செழும்புனல் இருக்கு மிடத்தைக் குறிப்பிடுகவென வேண்ட, அவளும் மிகுந்த தீம்புனல் ஊறும் ஒரு நீரூற்று நிலத்தின்கீழ் இருக்கும் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினாள். அவ்விடத்தை உடனே அவ்வரசர் அகழ்விக்க, மிகுதியான இனியநீர் கீழிருந்து சுரந்து மேலே பெருகியது. அதுகண்ட அரசர் பெருங்களிப்புற்று அவ்வம்மைக்குப் பெருஞ்சிறப்புகள் செய்து சமயப்பட்டம் அளித்து உதவிச்சம்பளமும் வழங்கினர்.

அவடன் வியத்தகும் ஆற்றலை நேரே கண்டறிந்த அஞ்ஞான்றை இயற்கைப்பொருள் நூலார் பெரிதுந் திகைத்து, அவ்வாற்றலின் உண்மையைத் தெரிதல்வேண்டி, முன்னுள்ளோர் நூல்களை யெல்லாம் ஆராயத் துவங்கினர். ஆராய்ந்து, கடைசியாக, இயற்கைப்பொருள் ஆராய்ச்சியிற் பல பெருநுட்பங்களைக் கண்டறிந்து உலகத்திற்குப் பேருதவி செய்தவராகிய ஊசினர் (Huygens) என்பார் எழுதிவைத்திருந்த ஒரு கடிதத்தைத் தெரிந்தெடுத்தனர். போரிலிருந்து சிறையாகப் பிடித்துக்கொணர்ந்து அந்துவர்ப்பு (Antwerp) நகரின் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டிருந்த ஒருவர், எவ்வளவு தடிப்பான மட்டிப் பொருள்களையும் உற்றுநோக்கி, அவை செந்நிறம் வாய்ந்திலவாயின், அவற்றால் மறைக்கப்பட்ட பண்டங்களைத் தெளிவாகக் கண்டறிந்துரைக்கும் அறிவாற்றல் உடையராயிருந்தனர் என்னும் வியக்கத்தக்க வரலாறு அக்கலைஞர் வரைந்த அக்கடிதத்திற் குறிக்கப்பட்டிருந்தது. அதனைத் தெரிந்த பிறகுதான் அவ்வியற்பொருளறிஞர் உள்ளம் அமைதியுற்றது.

மேற்சொன்ன போர்த்துக்கேசிய மாதரார் தமக்குள்ள அவ்வறிவாற்றலைப் பயன்படுத்த நேருங் காலங்களிலெல்லாம், ஏதோர் உணவும் உட்கொள்ளாமற் கடும் பட்டினி கிடப்பர்; ஏனென்றால், தமது வயிற்றிற் செரியாக்குணஞ் சிறிதிருப்பினுந், தமக்குள்ள அவ்வியத்தகும் ஆற்றல் மங்கிப்போதலை அவர் நன்குணர்ந்திருந்தனர்.

எனவே, நுண்ணறிவை வளர்க்க வேண்டுஞ் சிறார்கள் கண்ட கண்ட உணவுப்பண்டங்களை யெல்லாம் வேளையும் நேரமும் அறியாமல் உட்கொள்வது எவ்வளவு பிசகானதென்பது இனிது புலப்படுகின்றதன்றோ? ஆதலாற், சிறாரும் அவர்தம் பெற்றோரும் உணவுப் பண்டங்களை மிகுதியாக அருந்தாமல் விழிப்பாய் இருத்தலுடன், இடையிடையே பட்டினி கிடக்கவும் பழகுதலைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்று உணர்ந்து கொள்க.

பாலை வெளி

பாலைவெளியென்பது புற் பூண்டுகள் மரஞ் செடி கொடிகள் வளராத மணல் நிலமும் பாறை நிலமும் ஆகும். நிலம் நன்றாய் நனைந்து வளம்பெறத் தக்க வேண்டும் அளவு மழை பெய்யாமையாலுங், கீழே நீரூற்றுகள் இல்லாமையாலும் பச்சைப் பயிர்கள் சிறிதும் வளராத பெருநிலப் பரப்புகளே பாலை நிலங்கள் என்று சொல்லப்படுகின்றன. உயிர்வாழ்க்கைக்கு முதன்மையாக வேண்டப்படும் எந்தப் பயிரும் இவற்றின்கண் நிலை பெறுமையால், வேறு சிற்றுயிர்களும் விலங்குகளும் மக்களும் இப் பாலைவெளிகளிற் காணப்படுவதில்லை.

நிலத்தின் கீழ் ஆழமாக வேர் ஊன்ற வல்லனவும் மழையினுதவியை எதிர்பாராமலே வளரத் தக்கனவுமான சப்பாத்துக் கள்ளி அல்லது நாகதாளி என்னும் முட் செடிகளும் இவற்றை யொத்த வேறு சில செடிகளுமே சில பாலைவெளிகளிற் செழிப்பாகக் காணப்படுகின்றன. "எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன" என்னும் பழமொழிப்படி இந் நாகதாளிச் செடிகள் மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் பெரும்பாலும் பயன்படுதல் இல்லாமையால், வறண்டு வற்றிய பாலை நிலங்களுக்கு ஏற்ற செடிகள் இவைகளே யாகும்.

மழையும் ஆறும் ஏரியுங் குளமும் நீரூற்றும் மலிந்த இத் தென்னாட்டின்கண் வறண்ட பெரியபாலைவெளிகள் எங்குமே யில்லை. திருச்செந்தூர் இராமநாதபுரப் பக்கங்களிற் காணப்படும் நெய்தல் நில மணற் பரப்புகளைப் பாலைவெளி யென்று கூறுதல் ஆகாது. ஏனென்றால், அம் மணற்பாங்குகளிற் பனை தென்னை உடை கருவேல் முதலான மரங்களும், எல்லா உயிர்களுக்கும் பயன்படத்தக்க ஏனைப் பயிர் பச்சைகளுஞ் செழுமையாய் வளர்ந்து பயன்தரக் காண்கின்றோம். இத்தென்னாட்டிற்கும் இதனை அகத்தடக்கிய இவ்விந்திய நாட்டிற்கும் புறம்பேயுள்ள நிலப் பகுதிகளிலேதாம் எட்டுணையும் பயன்படாப் பெரிய பெரிய பாலைவெளிகள் அமைந்திருக்கின்றன. இப் பாழ் நிலங்கள் பெரும்பாலும் இந் நிலவுலகத்தின் மேல்பால் எல்லையிலேயே காணப்படுதலை நினைவில் வைத்தல் வேண்டும். இந் நிலவுலகத்திற் காணப்படும் பெரும் பாலைவெளிகளாவன: சகாரா, காலகாரி, கொலொராடோ, ஆதகாமா, மேல் ஆத்திரேலியா, கோபி முதலானவைகளே யாகும்.

இவை தம்முட் சகாரா என்னும் பாலைவெளியே உலகத்தில் மிகப் பெரிய தொன்றாகும். இஃது ஆப்பிரிக்கா தேயத்தின் வடபகுதியில் உளது. இதன் நீளம் மூவாயிரம் மைல், அகலம் ஆயிரமைல் என்று கணக்கெடுத் திருக்கின்றார்கள். இது பெரும்பாலும் மஞ்சள் நிறமான புதைமணல் வாய்ந்ததாயிருக்கின்றது. இதன்கண் வீசுங் கடுஞ் சுழற்காற்று இதன் மணலை மலைபோல் மேலெழுப்பிச் சுழற்றிக்கொண்டு செல்லுந் தோற்றமானது, மஞ்சள் மலையொன்று மேலெழுந்து விரைந்து

சுழல்வதையே ஒத்திருக்கும். இங்ஙனம் எழுந்து சுழலும் மணற் குன்றானது ஒரோவொருகால் அப்பாலை வெளியில் வழிச் செல்லும் வணிகர் குழுவை அப்படியே தன்னுட் புதைத்துவிடுதலும் உண்டு. அதனால் அவ்வெளியினூடு செல்லும் வணிகர் கூட்டங்கள் அக்காற்று வீசாத காலம் பார்த்தே அதன்கட் செல்வர். மேற்குறித்த சுழற் காற்றினால் ஆங்காங்குத் தொகுத்துச் சேர்க்கப்பட்டிருக்கும் மணற்குன்றுகள் இப்பாலை நிலமெங்குங் காணப்படுகின்றன. இவைகளுட் சில கடல் மட்டத்திற்கு மேல் ஆயிர அடி உயரமுள்ளனவாகவும் இருக்கின்றன. இம் மணற் குன்றுகளை யன்றிச் சிவந்த மலைப் பாறைகளும் இவ்வெளியின் இடையிடையே சிதறித் தோன்றுகின்றன. இம் மலைப்பாறைகளுக்கும் மணற் குன்றுகளுக்கும் நடு நடுவே பள்ளத்தாக்குகளும் உள்ளன.

நீர்ப்பசை யற்று வறண்டு எந்தப்பக்கத்திற் பார்த்தாலும் மணலும் மணற் குன்றும் மலைப்பாறைகளும் உடையதாய்க், கதிரவன் வெப்பத்தால் அழன்று கனலாயிருக்கும் இப் பெரு மணற் பரப்பானது நோக்குவார்க்குந், தன்னூடு வழிச் செல்வார்க்கும் பெரு நடுக்கத்தை விளைப்ப தொன்றாயினும், இஃது இடையிடையே ஒன்றுக்கொன்று தொலைவான இடங்களிற் கொழுமையான பேரீச்ச மரத் தோப்புகளும் இளமரக்காக்களும் வாய்ந்துளது என்றால் எவர்க்குத்தாம் வியப்புண்டாகாது? இது கொண்டு எத்துணைக் கொடிய இயற்கையமைப்பிலும் உயிர்களுக்கு இனியவான மென்றன்மைகள் உள்ளடங்கியிருக்குமென்பது இனிது புலனாகின்றதன்றோ? உயிரைக் கொள்ளைகொள்ளுங் கொடிய நெருப்புக் காற்றுக்குங் கதிரவன் வெப்பத்திற்கும் அஞ்சாமல் அவற்றையும் ஊடுருவி வரும் அரும் பெரு முயற்சியுடையார்க்கு, ஆண்டவன் தன் றண்ணருளை வழங்கும் அடையாளமாகவே, வளப்பம் மிகுந்த இத் தோட்டங்களைக் கருதல் வேண்டும். இவற்றின்கண் ஓவாது சுரந்து ஒழுகும் நீர் ஊற்றுகளும் அவற்றால் நீர் நிறைந்து நிற்கும் வாவிகளும் பால்போலுந் தீஞ்சுவை யமிழ்தை, நாவறண்டு உடல்கரிந்து வரும் வழிப்போக்கர்க்கு ஊட்டுகின்றன; இவற்றிற் செழுமையாய் வளர்ந்து பச்சைப் பசே

லென நிற்கும் பேரீச்ச மரங்கள் அத்தி மரங்கள் நாரத்தை மரங்கள் கொடிமுந்திரிக் கொடிகள் முதலியன, தம்மகத்துக் குலை குலையாய்த் தாமாகவே பழுத்துத் தொங்குங் கற்கண்டு அனைய கனிகளை ஏராளமாய்த் தந்து அவர்தங் கடும் பசியை யாற்றுகின்றன. இவைகளே யன்றி, நெல்லும் வேறு சில பயறுகளுங் கூட அவ் விளமரக்காக்களின் ஊடே ஊடே தாமாகவே செழிப்பாய் வளர்ந்து வழிச் செல்வார்க்கு வேண்டும் உணவுப் பொருள்களை உதவுகின்றன.

இப்பெரும் பாலைவெளியினூடு அஞ்சா நெஞ்சினராய் வழிச்செல்லும் வணிகர் யாவர்? அவர் எவ்வாறு அப்புதை மணற்பரப்பைக் கடந்து செல்கின்றனர்? என்னும் வினா நட்கட்கு இயல்பாக எழுமாதலால், அவற்றிற்கு விடையுஞ் சிறிது இங்கு இயம்புவாம். இப்பாலை நிலத்திற்குக் கிழக் கெல்லையிலுள்ள அரேபியா தேயத்து அராபிக்கார வணிகர்களே தம் பெண்டு பிள்ளைகளுடன் அம் மணல்வெளியைக் கடந்து செல்கின்றார்கள்.

இவர்கள் அதன் ஊடு செல்வதற்குப் பயன்படுத்துவன ஒட்டகங்களே யாகும். ஒட்டகத்தைத் தவிர வேறு எந்த விலங்கும் புதைமணலிற் பெருஞ் சுமைகளைச் சுமந்துகொண்டு நடவா. ஏனென்றால், ஒட்டகத்தின் காலடிகள் அகலமாய்ப் பிளவின்றி உரலடிபோற் சப்பையாய்த் தசை மிகுந்து இருத்தலால் அவை மணலுள் அழுந்தா; மற்றுக், குதிரைக் குளப்படிகள் குறுகலாய்க் கெட்டியாய் இருத்தலாலும், மாட்டின் குளம்புகள் பிளப்புள்ளனவாய் அங்ஙனமே சிறியவாய்க் கெட்டியாய் இருத்தலாலும் அவ் விருவகை விலங்குகளின் கால்களும் புதைமணலிற் புதைந்துவிடும்; ஆகையால், இவை மணல் வெளிகளில் நடவா. ஆனது பற்றியே அராபி வணிகர்கள் இம் மணல்வெளியினூடு செல்வதற்கு ஒட்டகங்களையே பழக்கிப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், ஒட்டகங்கள் பசுந் தழைகளையுந் தண்ணீரையுந் தவிர வேறு எதனையும் உட்கொள்வதில்லை; அதனால் அவற்றை வளர்ப்பவர்க்குச் செலவு சிறிதுமே யில்லை. அதுவல்லாமலும், ஒட்டகமானது ஓரிடத்தில் தண்ணீர் பருகினால், திரும்பப் பல நாட்கள் வரையில்

தண்ணீர் வேண்டாது; ஏனென்றால், அதன் வயிற்றகத்தே யுள்ள தண்ணீர்ப்பை ஒரு பெரிய குடத்தின்அள வுள்ளது; ஓரிடத்திற் பருகிய நீரினால் அஃது அதனை நிரப்பிக்கொள்ளுமாயின், அது நீர்விடா யின்றிப் பல நாட்கள் உயிர்வாழ வல்லது. ஆகவே, நூற்றுக்கணக்கான மைல் வரையில் தண்ணீர் சிறிதுங் கிடைக்கப்பெறாத சகாராப் பாலைவெளியில் எத்தனையோ திங்கள் வழிச்செல்ல வேண்டியவர்களான அராபி வணிகர்க்கு ஒட்டகத்தினும் பயன்படும் வேறொரு விலங்குண்டோ சொல்லுமின்! ஆகவே, அராபி வணிகர்கள் தம்முடைய ஒட்டகங்களின்மேல் அம்பாரி கட்டி, அதில் தம் பெண்டு பிள்ளைகளையும், உணவுப் பண்டங்களையும், வாணிகச் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு, இப்பாலை நிலத்தினூடு நெடு வழி செல்வார்கள். இவ்வணிகர்கள் இதன்கண் ஒருவர்இருவராய்ச் செல்லார்கள். நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான வணிகர்கள் ஒருங்கு சேர்ந்துகொண்டுதான், அஞ்சத்தக்க இந்நெடு வழியிற் செல்வார்கள். ஒட்டகங்களின் மேல் ஒருவர்பின் னொருவராய்த் தேர்வடம் பிடித்தாற்போல் இவ் வணிகர் குழாஞ் செல்வதைக் காணுங் காட்சி பெரியதொரு புதுமையாய் வேடிக்கையாய் இருக்கும்.

இவ்வாறு செல்லும் அராபி வணிகர்கள் நூற்றுக்கணக்கான மைல் கடந்து சென்று, இப்பாலைவெளியின் இடையிடையே யுள்ள வளவிய பசுமரத் தோட்டங்களிற் சில நாட்கள் தங்கித் தங்கி யிளைப்பாறிக், கடைசியாகப் பல முகமாய்ப் பிரிந்து, இப்பாலை நிலத்தின் மேல்விளிம்பைச் சூழ விளங்கா நிற்கும் நகரங்களுட் சென்று, தாங்கொண்டு சென்ற சரக்குகளை விலைசெய்து விட்டு, அவ்வந் நகர்களிற் கிடைக்கும் வேறு பண்டங்களை யேற்றிக்கொண்டு, சென்ற வழியே திரும்பித் தம் ஊர்க்கு மீள்வர். இங்ஙனமாக இச் சகாராப் பெரும் பாலை நிலமும் அராபி வணிகரின் வாணிகச் செலவுக்குப் பயன்படுதல் கண்டு கொள்க.

இப் பாலைவெளியின் இடையிடையே அமைந்துள்ள கொழுவிய பசுமரத் தோட்டங்களிற் கொடிய கொள்ளைக்காரர்கள் குடியிருந்து கொண்டு வழிப்பறி செய்வது வழக்கம்.

ஆயினும், அராபி வணிகர்கள் படைக்கலன்கள் பூண்டு பெருங் கூட்டமாய்ச் செல்லத் துவங்கிய பின், அக் கொள்ளைக்காரரின் கொட்டம் அடங்கியது. சகாரா நிலத்திற்கும் அதனைச் சூழ்ந்த நகர்கள் பலவற்றிற்கும் உரியவரான பிராஞ்சு அரசியலாரும், அக்கொள்ளைக் கூட்டங்களின் குறும்பை அடக்கி, அப் பாலைவெளி நெடுகப் புகைவண்டி விடுதற்கும் பாட்டை யமைக்க ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இனிச், சகாராவுக்குப் பிற்சொல்லப்பட்ட தாகிய 'காலகாரி' என்னும் பாலைவெளி, தென்னாப்பிரிக்காவில் நாரத்தையாற்றிலிருந்து அறுநூறு மைல் நீளமுடையதாய்க் கிடக்கின்றது. இதில் உப்பளங்கள் மிகுதியா யிருக்கின்றன.

இனிக், 'கொலொராடோ' என்னும் பாலை நிலம், வட அமெரிக்காவின் இணையரசு நாடுகளின் மேற் பகுதியில் தொகுதி தொகுதியான மலைத் தொடர்கள் வாய்ந்ததாய்ப், பசுமரம் எதுமின்றிப் பாழாய்க் கிடக்கின்றது. ஆனாலும், இதன் மையத்தில் உள்ள மலைகள் மட்டும் அருவி நீரும், அதனாற் செழுமையான காடுகளும் உடையதாய்த் திகழா நிற்கின்றன.

இனி, 'ஆதகாமா' என்னும் பாலைவெளி தென்னமெரிக்காவில் வடசில்லி நாட்டை யடுத்துள்ளது. இதுவும் மலைப் பாறைகளாலும், அவைதம்மி லிருந்து சிதர்ந்த குண்டுக் கற்களாலும் நிறைந்திருக்கின்றது. இதன்கண் அடர்ந்து முளைத்திருக்கும் ஒருவகை நாகதாளிகள், குதிரைகளையுங் குதிரை மேற் செல்லும் ஆடவரையுந் தமக்குள் மறைத்துவிடத் தக்க அத்துணை யுயரமுள்ளனவா யிருக்கின்றன.

இனி, மேல் ஆத்திரேலியாவிலுள்ள பாலைவெளியின் இயல்பை இன்னும் எவருஞ் சென்று காணவில்லை. மற்று, நமது இந்திய நாட்டுக்கு வடக்கே நெடுந்தொலைவி லுள்ள மங்கோலியா தேயத்திற், 'கோபி' என்னும் பாலைவெளி யிருக்கின்றது. இது, சகாரா வெளியைப்போற் புதை மணல் நிறைந்ததாயுங், கொடிய சூறை அனற்காற்றால் திரட்டிக் குவிக்கப்பட்ட மணற் குன்றுகளும், அவற்றினிடையே பல

பள்ளத்தாக்குகளும் உடையதாயும் இருக்கின்றது. இது வெய்யிற் காலத்தில் வெப்பம் மிகுந்துங் குளிர் காலத்திற் குளிர் மிகுந்துங் கிடக்கின்றது.

இனி, நமது தமிழ் நாட்டின் தெற்கே யிருந்து கடலுள் அமிழ்ந்திப்போன பண்டைத் தமிழகமாகிய **குமரி நாட்டின்** நடுவே ஒரு பெரும் பாலைவெளி மணல் நிறைந்ததாய் இருந்தமையும், அதனூடு சென்று வாணிகம் புரிந்த வணிகர் குழாங்கள் ஒட்டகங்கள்மேல் இவர்ந்தே அதனைக் கடந்தமையும், அப்பண்டைக் காலத்தில் இயற்றப்பட்ட அரும்பெருந் தமிழ் முதல் நூலாகிய **தொல்காப்பியத்தில் ஆசிரியர் தொல்காப்பியனார்** கூறுங் குறிப்புகள் கொண்டு நன்குணரப் பெறுகின்றோமென்க.

மதிப்பரிய மணிக்கலன்

'அவன்சுவர்க்கர்' (Abensberg) என்னுஞ் செர்மன் தேயத்துச் செல்வர் ஒருவர் முப்பத்திரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்கள் எல்லாரையும் மிக அருமையாக வளர்த்து வந்தனர். ஒருகால் செர்மன் தேய அரசன் தம்முடைய நாடு நகரங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில், ஆங்காங்குள்ள சிற்றரசர்களும் அரசியற் றொழிலில் அமர்ந் திருப்பவர்களுஞ் செல்வர்களும் பிறரும் மணிகள் பதித்த பொன்னணிகள் பொற் கலன்கள் பொற் பட்டாடைகள் முதலான விலையுயர்ந்த பொருள்களைத் தத்தங் காணிக்கைகளாகக் கொணர்ந்து வைத்து அரசனை வணங்கி வாழ்த்தினர். ஆனால், அவன்சுவர்க்கரோ அரசன் தம் ஊர்க்கு அணித்தாக வருகையில், தாம் பெற்ற முப்பத்திரண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு சென்று, அரசனை வரவேற்று, அரசற்குந் தமது நாட்டிற்குந் தாம் செலுத்துதற்குத் தக்க காணிக்கைகள் தம் முப்பத்திரண்டு பிள்ளைகளுமாகிய மதிப்பரிய மணிக்கலன்களே என மொழிந்து, அப் பிள்ளைகள் எல்லாருடனும் அரசனை வணங்கி வாழ்த்தினர். அதுகண்ட அரசன் அவரது உள்ளத்தின் உண்மையையும் அவர் செலுத்திய காணிக்கைகளின் மதிப்பரிய தன்மையையும் நன்குணர்ந்து வியந்து,

அவர்க்கும் அவர் தம் புதல்வர் புதல்வியர்க்கும் பல் பெருஞ் சிறப்புகள் செய்து மகிழ்ந்தான்.

இங்ஙனமே நிகழ்ந்த மற்றொன்று வருமாறு : 'கருநீலி யாள்' (Cornelia) என்னும் ஒரு பெருமாட்டியாரைக் காண வந்த மற்றொரு பெருமாட்டி தனக்குள்ள செல்வப் பெருக் கையுந் தான் அணிந்திருந்த நகைகளின் விலையுயர்ந்த தன்மை யையுந் தானாகவே புகழ்ந்து பேசி முடித்த பின்னர்க், கருநீலி யாளை நோக்கி "அம்மே, உங்களுக்கு எவ்வளவு செல்வம் உளது? உங்களுக்கு எத்தனை விலையுயர்ந்த நகைகள் உள் ளன?" என்று வினவினள். அதுகேட்ட கருநீலியாள் தமது இல்லத்தின் பின்கட்டினுள்ளே சென்று தம் பிள்ளைகள் இரு வரையுங் கொண்டுவந்து அந்த அம்மைக்குக் காட்டி "இவர் கள் இருவருமே எனக்கு இரு பெருஞ் செல்வத் திரள்கள்! இவ்விருவருமே எனக்கு மதிப்பரிய மணிக்கலன்கள்!" என மொழிந்தனள். இச்சொற் கேட்ட அந்த அம்மை தனது செல்வத்தின் போலித் தன்மையையுங், கருநீலியாளுக் குள்ள செல்வத்தின் உண்மையையும் உணர்ந்து வெட்கிச், செருக் கழிந்து, தனது பிழையைப் பொறுக்கும்படி கருநீலியாளை வேண்டினள்.

ஓர் அரசியற்றலைவரின் அரிய இயற்கை

மிகவும் ஏழைமையான நிலைமையி லிருந்து தையல் வேலை செய்து பிழைத்து வந்தவரான 'அந்துரு சான்சன்' (Andrew Johnson) என்னும் ஆண்மகனார் தமது அறிவாற்ற லாலுந் தமது நல்லியற்கையின் விழுப்பத்தாலும் படிப்படியே தமது வாழ்க்கைநிலை உயரப் பெற்றுக், கடைசியாக வட அமெரிக்காவின் கண்ணதான இணைக்கப்பட்ட நாட்டரசுக் குத் தலைவராஞ் சாலப் பெரிய நிலையை அடைந்தனர். ஒரு கால் ஓர் ஊரின்கண் ஒரு பெருங் கூட்டத்தின் இடையே அவர் ஒரு பேருரை நிகழ்த்துங்கால், தாம் அரசியற்றுறை களில் எவ்வெவ்வாறு ஊழியஞ் செய்து எவ் வெவ்வகையில் மேலுயர்ந்து வந்தனரோ அவ் வரலாறுகளை யெல்லாம் முறை சொல்லிக்கொண்டு வந்தனர். அப்போது அக் கூட்டத்தி

210472

ASTROLOGICAL MANUALS.

The Names of Books.	Original Price. Rs. A. P.	Reduced Price. Rs. A. P.
Everybody's Astrology, by Alan Leo	1 0 0	0 10 0
What is a Horoscope & How Is it cast? by Alan Leo,	1 0 0	0 10 0
The Horoscope in Detail, by Alan Leo & H. S. Green,	1 0 0	0 10 0
Directions & Directing, by H. S. Green,	1 0 0	0 10 0
The Degrees of the Zodiac Symbolised, by Charubel,	1 0 0	0 10 0
Raphael's Horary Astrology (Every question relating to the future may be answered)	3 0 0	2 0 0
ASTROLOGICAL BOOKS BY EMINENT INDIAN SCHOLARS.		
Jatakachundrika (Moonlight to Astrology) in English, by B. Suryanarain Row, B.A., M.R.A.S.,	1 4 0	0 14 0
Illustrative Horoscopes, by the same,	1 0 0	0 12 0
Jinendramala (Horary Astrology) in English, by N. Chidambara Iyer, B.A., F.T.S.,	1 8 0	1 0 0
A Guide to Astrology, by S. C. Mukhopadhaya, M.A.,	0 12 0	0 8 0

Chamber's English Dictionary.

By T. Davidson,

Enlarged Library edition, large type (An up-to-date authoritative English Dictionary of unique merit) 15 0 0 12 0 0

The International Library of Famous Literature, 20 Volumes.

Original Price, Rs. 200, Reduced Price, Rs. 150.

Edited by Richard Garnett, L.L.D., C.B. Picture to yourself a complete library, twenty large and beautiful volumes containing the best things that have ever been written, the masterpieces of the greatest writers of good books the whole world over, living and dead, English, American, French, German, Spanish, Russian, Chinese, Japanese, Scandinavian, Italian, Greek, Roman, Egyptian, Persian; every nation, ancient and modern, that has produced a writer of good, interesting books; all of it of course, done into good English so that you do not need to know any other language, but can, read in English the great writings of all lands and all times—enough intensely interesting, reading to last a life time and you have only a rough idea of the International Library. They contain over 10,000 big pages printed in good size type on handsome soft book paper of capital quality; there are about 500 full-page pictures in the set, each printed separately from the type pages on a fine art coated paper; the bindings are rich, handsome and durable.

ஆசிரியர் மறைமலையடிகள்

மொழிபெயர்த்து இயற்றிய

சாகுந்தல நாடகம் உ-ம் பதிப்பு (வெளிவந்து விட்டது)

KALIDASA'S SAKUNTALA IN TAMIL

வடமொழியில் நல்லிசைப்புலவராய் விளங்கிய காளிதாசர் இயற்றிய இன்சுவை நாடகத்தின் இனிய தமிழ்மொழிபெயர்ப்பு. இதன் உ-ஆம் பதிப்பு மாணாக்கர்க்கும் பிறர்க்கும் மிகவும் பயன்படும் முறையிற் பதிப்பிடப்பட்டிருக்கின்றது. சாகுந்தலநாடக மொழிபெயர்ப்பு மூலத்தில் வந்துள்ள அருஞ்சொற்கள் சொற்றொடர்கள் பாட்டுகள் கதைகள் முதலியவற்றிற்கெல்லாம் விளக்கமான உரைக்குறிப்புகள் விரிவாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன; 220-பக்கங்கள்; விலை இரண்டேகால் ரூபா.

GREEN & Co., (கிரீன் அன் கம்பெனி)

533, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

பார்வதி அச்சுக்கூடமும் நூல்நிலையமும்

இவ்வச்சுக்கூடத்தில் எல்லா வகையான அச்சுவேலைகளும் அழகாகவுந் திருத்தமாகவுந் தமிழ் ஆங்கிலத்திற் செய்து கொடுக்கப்படும்.

ஆசிரியர் மறைமலையடிகளால் இயற்றப்பட்ட அரியபெரிய நூல்கள் இதன்கண் விற்கப்படுகின்றன. இந்நூல்களை முன் பணம் அனுப்பியாயினும் வி. பி. பி. வழியாகவாயினும், இந்தியா, இலங்கை, பர்மா முதலான நாடுகளிலுள்ள அன்பர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மலாய் நாடுகளில் உள்ள அன்பர்கள் மேற்குறிப்பிட்ட நூல்களையும், கீழ்க் குறிப்பிட்டவைகளையும் முன்பணம் அனுப்பியே பெறுதல்வேண்டும்.

வெளியார் விற்கும் இலக்கண இலக்கிய நூல்கள், சோதிடவைத்திய நூல்கள், புராணங்கள், கதைகள் முதலியவை, பள்ளிக்கூடத் தமிழ் ஆங்கில பாடபுத்தகங்கள், குறிப்பு ஏடுகள் (நோட்புத்தகங்கள்,) ஊற்றுப் பேனாக்கள் (பவுண்டன்பென்,) கைக்கெடியாரங்கள் முதலான எத்தகைய பொருள்களும் முன் பணம் அனுப்பும் அன்பர்கட்கு வாங்கியனுப்பப்படும். வெளியாரிடம் உள்ள இவைகளை முன்பணங்கொடுத்தே வாங்கி யனுப்பவேண்டியிருத்தலால், இவைகளை வேண்டும் அன்பர்கள் முதலில் அன்புகூர்ந்து முன்பணம் அனுப்புவார்களாக!

அ. கனகராயர், தலைவர்.

ஞானசாகரக் கையொப்ப நேயர்க்கு

நமது திருமுருகன் அச்சுக்கூடத்தைப் பல்லாவரம் கொண்டுவந்த பிறகு, நம் அன்பர் திரு. அ. கனகராயர் தமக்கே உரியதாகப் பார்வதி அச்சுக்கூடம் என்பது ஒன்று சென்னையில் திறப்பித்து உள்ளார். அதற்கு எம்மால் இயன்ற உதவிகள் செய்யவேண்டியிருந்தமையாலும், வேலையாட்கள் இடையிடையே நின்று வந்தமையாலும், ஞானசாகரத்தின் இவ் இதழ்கள் காலம் தாழ்த்து வராவாயின. இனி இதன் இதழ்கள் ஒழுங்காக வெளிவருமாறு திருவருள் [illegible]